www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2011
ரூ.10.00



## மாதம் இரண்டு லாக்-அப் கொலை:

# 'பச்சை'யான போலீசு ஆட்சி!

படிப்பகம்

www.padippakam.com

# வால் ஸ்டிரீட் முற்றுகை:

# முன்னேற்றத்தின் முதல் தேவை புரட்சிகரக் கட்சி

**முதலாளித்துவத்துக்கு எதிரான கம்யூனிசத்தின் சித்தாந்தப் போர், போல்ஷ்விக் உறுதியும் கட்டுப்பாடும் கொண்ட கட்சி – இவ்விரண்டு அவசரத் தேவைகளையும் நிறைவு செய்யக் கோருகின்றன உலகெங்கும் எழுந்துவரும் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள்.**

**க**டும் குளிரையும் பனிப்பொழிவையும் மீறித் தொடர்ந்து கொண்டிருக்கிறது வால் ஸ்டிரீட் போராட்டம். வால் ஸ்டிரீட் போராட்டத்துக்கு ஆதரவாக உலகெங்கும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். இலட்சக்கணக்கான மக்கள்திரளின் கோபத்தில் ரோம் தீப்பிடித்தது. சம்பளவெட்டு, ஆட்குறைப்பு, ஓய்வூதிய வெட்டு, மக்கள் நலத் திட்டங்கள் ரத்து, பொதுத்துறை விற்பனை ஆகியவற்றுக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்கள் நடத்திய போராட்டத்தில் கிரீஸ் பற்றி எரிந்தது. எகிப்தின் மக்கள் முபாரக்கின் இராணுவ டாங்குகள், போர் விமானங்களுக்கு அஞ்சவில்லை. முபாரக்கின் கூலிப்படைகள் முதல் குதிரைப்படைகள் வரை அனைத்தையும் எதிர்த்து நின்றார்கள். அன்றைய சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தின் தலைநகரம், இளைஞர்களின் கலகத்தால் நாட்கணக்கில் தீப்பிடித்து எரிந்தது.



கண்டங்கள், நாடுகள், நகரங்கள் என்ற வேறுபாடு இல்லாமல், குறுக்கு நெடுக்காக உலகம் முழுவதும் மக்களின் கோபத் தீ-க்கு எண்ணெய் வார்த்திருக்கிறது முதலாளித்துவம். முபாரக்கின் சர்வாதிகாரம், கிரீஸ் அரசின் சிக்கன நடவடிக்கைகள், ஒபாமாவின் வரிகள், வேலையின்மை, கல்வி – மருத்துவ மானிய வெட்டு, சுற்றுச்சூழல் அழிவு என்று ஆயிரம் பிரச்சினைகள் பட்டியலிடப்பட்டாலும், அவை அனைத்தின் மூல காரணம் உலக முதலாளித்துவம்தான்.

போராடும் மக்களுக்கு இது தெரியாமல் இல்லை. ''முதலாளித்துவம் ஒழிக!, வங்கி முதலாளிகளைக் கைது செய்!'' என்று அமெரிக்காவின் ஆர்ப்பாட்டக்காரர்கள் முழங்குகிறார்கள். உணவு, உடை, இருப்பிடம், வேலை, பொழுதுபோக்கு, நுகர் பொருட்கள், கல்வி, சுகாதாரம், போலீசு, இராணுவம் அனைத்தும் கார்ப்பரேட் முதலாளித்துவத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை அவர்கள் புரிந்திருக்கிறார்கள். தனி மனித முயற்சியின் மூலம் யாரும் வெற்றி பெற முடியும்மென்ற 'அமெரிக்க கனவும்' அமெரிக்க ஜனநாயகமும் பொய் என்பதை அவர்கள் தம் சொந்த அனுபவத்தில் பட்டு உணர்ந்திருக்கிறார்கள்.

எனினும், முதலாளித்துவத்திற்கு மாற்று சோசலிசமே என்று ஒப்புக் கொள்வதில் அவர்களுக்குத் தயக்கமிருக்கிறது. தன்னுடைய அரசமைப்பின் மீது மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதில் முதலாளித்துவம் வெற்றி பெற முடியவில்லை. எனினும், பல பத்தாண்டுகளாக விடாப்பிடியாக நடத்திய அவதூறுப் பிரச்சாரத்தின் விளைவாக, மக்கள் மனதில் கம்யூனிசத்தின் மீது அவ

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்











படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய–லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 1
நவம்பர் 2011

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## மூவர் தூக்கு:

# கிழிந்தது அம்மாவின் கருணைமுகம்!

தமக்கு விதிக்கப்பட்டிருந்த மரணதண்டனைக்கு எதிராக முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு அக்டோபர் 28-ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசின் வழக்குரைஞர் மூவரின் மனுக்களையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், தூக்குத் தண்டனையை நிறைவேற்றவேண்டுமென்றும் வாதாடினார். இது அனைவரும் எதிர்பார்த்ததுதான். ஆனால் ''தமிழக மக்களின் உணர்வுகளுக்கும் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் மூவரின் கருணை மனுக்களை மறுபரிசீலனை செய்து அவர்களின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கவேண்டும்'' என்று ஒரு தீர்மானத்தை ஆகஸ்டு 30-ஆம் தேதியன்று தமிழக சட்டமன்றத்தில் முன்மொழிந்த ஜெயலலிவின் அரசு, தற்போது அதற்கு நேர் எதிராகப் பேசியிருக்கிறது. ''கருணையை நியாயப்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் எதுவும் தோன்றி விடவில்லை'' என்று கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் கருணை மனுவை நிராகரிப்பதற்கு ஆளுநர் கூறிய வார்த்தைகளை அப்படியே வழிமொழிந்திருக்கிறது. எந்தத் தமிழ் மக்களின் பெயரால் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதோ, ''அந்த மக்களின் உணர்வு குறித்து கருத்து எதுவும் கூற விரும்பவில்லை'' என்று அலட்சியமாகச் சொல்லியிருக்கிறது தமிழக அரசின் மனு.

ஜெயலலிதாவின் சட்டமன்றத் தீர்மானத்தின் பின்புலத்தில் இருந்திருக்கக் கூடிய காரணிகளை விளக்கி, ''இது அமைச்சரவை முடிவல்ல... இது இடுக்கண் களைவதற்காக நீண்ட கரமல்ல... இது அரசியல் ஆதாயத்தை ஜேப்படி செய்வதற்காகவே நீண்டிருக்கும் கரம். அதிலும் கொஞ்சம் வேண்டா வெறுப்பாகவே நீட்டப்பட்டிருக்கும் கரம். இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்குமாறு மத்திய அரசைக் கோருகின்ற தீர்மானத்தைப் போல, இது இன்னொரு தீர்மானம். அவ்வளவே'' என்றும், இதுவும் கூட மக்கள் போராட்டம் தோற்றுவித்த நிர்ப்பந்தத்தின் விளைவு என்றும் புதிய ஜனநாயகம் செப்டம்பர் இதழில் குறிப்பிட்டோம்.

ஆனால் மூவர் தூக்கினை எதிர்த்துப் பிரச்சாரம் மேற்கொண்டிருந்த தமிழ் உணர்வாளர்கள் எனப்படுவோர் ஜெயலலிதாவைப் பாராட்டினார்கள்; அம்மாவையும் 'தம்பி'யையும் அக்கம்பக்கமாகப் போட்டு சுவரொட்டி அடித்து பாராட்டு விழா நடத்தினார்கள். சட்டமன்றத் தீர்மானத்துக்குப் பழிவாங்கத்தான் பெங்களூரு வழக்கு முடுக்கி விடப்படுகிறது என்பன போன்ற அரிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டார்கள். ஆட்சிக்கு அரணாக இருப்போம் என்று சத்தியம் செய்தார்கள். நாப்புண்ணாகிப் புழுத்து நாறுமளவுக்கு அம்மாவின் புகழ் பாடினார்கள். இப்போது?

'முன்னுக்குப் பின் முரண்', 'அதிர்ச்சி', 'துரோகம்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே, ''சட்டப்பிரிவு 161-இன் கீழ் கருணை மனுவை அங்கீகரிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரமிருக்கிறது'' என்று ஜெயலலிதாவுக்கு ஆலோசனையும் கூறுகிறார்கள். அரசியல் சட்டப்படி அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்பதா இப்போது பிரச்சினை? அரசியல் சட்டமாவது, வெங்காயமாவது? காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மீறும் அதிகாரம் அரசியல் சட்டத்தின்படி மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்று தெளிந்ததனால்தான் கர்நாடக, கேரள அரசுகள் தீர்ப்பை மீறி செயல்படுகிறார்களா? கருணை மனுவை அமைச்சரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப முடியாமல் சட்டம்தான் ஜெயலலிதாவின் கைகளைக் கட்டிப்போட்டிருக்கிறதா?



படிப்பகம்

www.padippakam.com

தற்போது தமது கருணை மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மூவரும் தொடுத்துள்ள வழக்கில், தீர்ப்பு வழங்கப்போவது உயர்நீதிமன்றம்தான். மாநில அரசு தெரிவிப்பது வெறும் கருத்து மட்டுமே. எனினும், மனுவைக் கருணையுடன் பரிசீலிக்குமாறு கருத்து தெரிவிப்பதற்குக் கூட ஜெ. அரசு தயாராக இல்லை. தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனுவில் கூறப்பட்டுள்ளது தான் ஜெயலலிதாவின் உண்மையான கருத்து. இந்தக் கருத்துக்கு மாறாக, சட்டமன்றத்தில் அன்று நிறைவேற்றிய தீர்மானம்தான் முரண். அந்த வகையில் 'பின்னதற்கு முன்னது முரண்' என்பதே உண்மை. 20 ஆண்டுகளாக புலி எதிர்ப்பு, தீவிரவாத எதிர்ப்பு என்பதையே தனது அரசியலாகக் கொண்டு, தமிழ்-தமிழின உரிமை என்று பேசுவோரையெல்லாம் ஒடுக்கிவரும் ஒரு பாசிஸ்டு, திடீரென்று சட்டமன்றத்தில் அப்படியொரு தீர்மானம் நிறைவேற்றியதுதான் அதிர்ச்சிக்குரியதேயன்றி, தற்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனு அல்ல. இந்த சட்டமன்றத் தீர்மானமாக இருக்கட்டும், சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது ஈழம் வாங்கித் தருவதாக அம்மா தந்த வாக்குறுதியாக இருக்கட்டும், இவையனைத்துமே 'சும்மா' என்பதை சு.சாமியும் 'சோ'வுமே தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

'ஜெயலலிதாவே தமிழினத்தின் மீட்பர்' என்று உடுக்கடித்துத் தமிழக மக்களை நம்பவைத்ததும், சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றியவுடனே விழா எடுத்து புகழ்பாடியதும் தமிழின உணர்வாளர்கள் எனப்படுவோர்தான். இப்படியெல்லாம் தமிழ் மக்களை நம்பவைத்த பூசாரிகள் என்ற முறையில்தான், நெடுமாறன், சீமான், வைகோ, பெரியார் தி.க உள்ளிட்டோர், இப்போது ஜெ அரசின் கருத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்தவர்கள் போல முகத்தை வைத்துக் கொள்கிறார்களேயன்றி, ஜெயலலிதா ஒரு பார்ப்பன பாசிஸ்டு என்பது பூசாரிகள் அறியாத உண்மையல்ல. 'கேழ்வரகில் நெய் வடியும்' என்று தெரிந்தேதான் இவர்கள் பொய்ப்பிரச்சாரம் செய்தார்கள். கேட்டால், ''ஜெயலலிதாவைப் பற்றி எங்களுக்கும் தெரியும். சும்மா கொள்கை பேசிக்கொண்டிருந்தால் மூன்று உயிர்களைக் காப்பாற்ற முடியாது'' என்று ஏகடியம் பேசுவார்கள். விமரிசிப்பவர்களை காரியத்தைக் கெடுப்பவர்கள் என்று ஏசுவார்கள்.

அம்மாவின் கருணைக்கு நன்றி தெரிவித்து நாம் தமிழர் இயக்கம் நடத்திய பொதுக்கூட்டத்தில் சீமான் உள்ளிட்டோர்.




*தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனுவில் கூறப்பட்டுள்ளது தான் ஜெயலலிதாவின் உண்மையான கருத்து. இந்தக் கருத்துக்கு மாறாக, சட்ட மன்றத்தில் அன்று நிறைவேற்றிய தீர்மானம்தான் முரண். அந்த வகையில் 'பின்னதற்கு முன்னது முரண்' என்பதே உண்மை.*

ஜெயலலிதாவை அண்டியும், ஒண்டியும் அரசியல் நடத்தி, அதையே மாவீரமென்று சித்தரித்து வாய்ப்பந்தல் போட்டு, தமிழ் சினிமாவின் குத்தாட்டத்துக்கு இணையான ரசிக அனுபவத்தை வழங்கும் மேடைக் கச்சேரிகளை நடத்தி வந்தவர்களுக்கு அரசியல் பேசும் வாய்ப்பை அம்மா வழங்கியிருக்கிறார். மனிதாபிமானம், மரண தண்டனை ஒழிப்பு போன்ற அரசியலற்ற சொற்றொடர்களுக்குள் ஒளிந்து கொண்டு அம்மாவின் கருணைக்கு மன்றாடி இனிப் பயனில்லை. மூவரின் மரண தண்டனையை ரத்து செய்வதற்கான அரசியல் நியாயத்தை இனி பேசலாம். இனியாவது பேசுவார்களா என்று பார்க்கலாம்.

## 27-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 27-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இப்புரட்சிகர அரசியல் இதழ் 26 ஆண்டு காலமாகத் தொடர்ந்து வெளிவரப் பலவகைகளிலும் உதவிய வாசகர்களாகிய உங்களுக்கும், பல்வேறு இடர்ப்பாடுகளுக்குநடுவே இந்த இதழை உழைக்கும் மக்களிடம் கொண்டு சென்று புதிய வாசகர்களை உருவாக்க அயராது உழைத்த முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 27-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து இதழ் விலை ரூ.10.00-ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.120/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொள்வீர்கள் என்று கருதுகிறோம்.

மார்க்சிய-லெனினிய அரசியலை ஏந்தி, இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது உறுதியான ஆதரவுடன் 27-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

27-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகம் இதழுக்கு நேரிலும் அஞ்சலிலும் தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள். வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் 7 சோசலிசப் புரட்சி நாள் வாழ்த்துக்கள்!

-ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

சிவப்பஞ்சலி

# ரவுடிகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர் செந்திலுக்கு வீர வணக்கம்!

மதுரை மாவட்டம், யா.ஒத்தக்கடையைச் சேர்ந்த சில்வர் பாத்திர வியாபாரியும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் செயல்வீரருமான 27 வயதான தோழர் செந்தில், கடந்த அக்டோபர் 26-ஆம் தேதியன்று ரவுடிகளால் கொல்லப்பட்டுள்ளார்.

தோழர் செந்தில் வசித்துவரும் குறுகலான தெருவில் 17,18 வயதான கார்த்திக், நாகேந்திரன் எனுமிரு இளவயது ரவுடிகள் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் சாகசம் செய்வது, அதிவேகமாக அத்தெருவில் வந்து பீதியூட்டுவது என்பதாக அட்டகாசம் செய்த போது, குடியிருப்போரும் தோழரும் அவர்களைக் கண்டித்து எச்சரித்துள்ளனர். தோழரின் எச்சரிக்கையைத் தங்களுக்கு விடப்பட்ட சவாலாகக் கருதிய அந்த ரவுடிகள், தங்களது கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு, அன்று இரவு 10.30 மணியளவில் தனது வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்த தோழரைச் சுற்றி வளைத்து வயிற்றில் கத்தியால் குத்திச் சாய்த்துவிட்டுத் தப்பியோடிவிட்டனர். உதிரம் பெருக்கெடுத்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தோழர், மதுரை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குள் மரணமடைந்துவிட்டார்.

தோழர் செந்தில் ரவுடிகளால் கொல்லப்பட்டதைக் கண்டு வெகுண்டெழுந்த இப்பகுதிவாழ் மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுப் போராடிய பின்னர், தோழரைக் கொன்ற குற்றவாளிகளில் இருவரை மட்டும் கைது செய்து சிறையில் அடைத்துள்ள போலீசு, சாட்சியங்கள் இல்லை என்று எஞ்சிய இரு குற்றவாளிகளைக் கைது செய்யாமல் மழுப்பி வருகிறது.

ஈராண்டுகளுக்கு முன்பு பு.ஜ.தொ.மு.வின் சரியான அரசியல் மற்றும் செயல்பாட்டினால் ஈர்க்கப்பட்டு அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டவர்தான், தோழர் செந்தில். அமைப்பில் இணைந்த பிறகு அவரது பங்களிப்பு இல்லாமல் எந்தப் பணியும் நடந்ததில்லை எனுமளவுக்கு உற்சாகத்தோடும், முனைப்போடும் முன்னணி ஊழியராகச் செயல்பட்டார். அவசரத் தேவைக்கு இரத்த தானம் செய்வது, குருதிக் கொடையாளர்களை ஏற்பாடு செய்து தருவது என எல்லையற்ற மனிதநேயராக வாழ்ந்த அவர், பாட்டாளி வர்க்கப் பண்பாட்டை வழுவாமல் பின்பற்றியதோடு, அமைப்பின் நிகழ்ச்சிகள் அனைத்திலும் குடும்பத்தோடு பங்கேற்று வந்தார்.



தோழர் கொல்லப்படுவதற்கு சற்று முன்னர் கூட, அத்வானியின் ரத யாத்திரையை அம்பலப்படுத்தி அமைப்பின் சார்பில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை மறுநாள் அதிகாலை ஒட்டுவதற்குத் தேவையான பசையைத் தயார் செய்து வைத்திருந்தார். அவர் தயாரித்த பசையைக் கொண்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டியை ஒட்ட நேர்ந்த வேதனையால் தோழர்கள் விம்மிக் கதறினர். 3 வயதான ஆண் குழந்தை, பிறந்து 7 நாட்களேயான ஆண் குழந்தை, மனைவி கலைவாணி மற்றும் அமைப்புத் தோழர்களைப் பரிதவிக்கவிட்டுள்ள தோழரின் மரணம் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அக்டோபர் 27-ஆம் தேதியன்று யா.ஒத்தக்கடையில் அமைப்பின் சார்பில் தோழர் செந்திலுக்குச் சிவப்பஞ்சலி செலுத்தி நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்திலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற இறுதி ஊர்வலத்திலும் -றுக் கணக்கான பகுதிவாழ் மக்களும் சில்வர் பட்டறைத் தொழிலாளர்களும் பங்கேற்றுத் தோழரின் தியாகத்தைப் போற்றியும் ரவுடியிசத்துக்கு எதிராகவும் விண்ணதிர முழக்கமிட்டனர்.

வாழ்க்கையைப் பற்றிய எந்த மதிப்பீடும் இல்லாமல், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற கேடுகெட்ட பண்பாட்டைத் திணிக்கும் மறுகாலனியாதிக்கமும், மனிதப் பண்புகளை வேரறுக்கும் சாராய போதையும், ரவுடியிசத்தைக் கொண்டாடும் சினிமாக்களும் எவ்வாறு இளம் ரவுடிகளை உருவாக்குகின்றன என்பதற்கும், இது எவ்வாறு சமுதாயத்துக்குப் பெருத்த அபாயமாகியுள்ளது என்பதற்கும் தோழரின் படுகொலை இன்னுமொரு சான்றாக அமைந்துள்ளது. இக்கேடுகெட்ட அழுகிநாறும் சமுதாய அரசியலமைப்பு முறையை வெட்டி வீழ்த்த, தோழர் செந்திலின் இலட்சியக் கனவுகளையும் புரட்சிகர உணர்வையும் போர்க்குணத்தையும் நெஞ்சிலேந்திப் போராட உறுதியேற்போம்!

தியாகத் தோழர் செந்திலுக்கு வீரவணக்கம்!

– புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

## மாதம் இரண்டு லாக்-அப் கொலை:

# 'பச்சை'யான போலீசு ஆட்சி!

**தமிழக போலீசு ஜெயாவின் ஆட்சியைத் தமது சொந்த ஆட்சியாகவே கருதுவதால், துப்பாக்கிச் சூடு, கொட்டடிக் கொலைகளை எவ்விதத் தயக்கமும் இன்றி நடத்தத் துணிகிறது.**

**க**டந்த செப்டம்பர் மாத இறுதியில் ஒரு திருட்டு வழக்கு சம்பந்தமாக சென்னை - விருகம்பாக்கம் போலீசாரால் பிடித்துச் செல்லப்பட்ட முத்து என்பவர் போலீசாரால் மிருகத்தனமாக அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொட்டடிக் கொலை தொடர்பாக மூன்று போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளபொழுதிலும், ''முத்து நெஞ்சு வலியால்தான் இறந்து போனதாக'' உயர் போலீசு அதிகாரிகள் கூறி வருகின்றனர்.

இது அப்பட்டமான பொய் என்பதற்குப் பல நேரடியான சாட்சியங்கள் உள்ளன. சென்னை போலீசார் முத்துவைக் கைது செய்து, இத்திருட்டு சம்பந்தமாக விசாரணை செய்வதற்காக முத்துவின் சொந்த ஊரான கடலூருக்கு அவரை அழைத்துவந்தபொழுதே, ''அவரது தலையிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்ததாக''க் கூறுகிறார், அம்பிகா என்ற பெண். முத்து இரத்தம் வடிந்த நிலையிலேயே கடலூருக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்டதை முத்துவின் பெற்றோர்களும் உறுதி செய்துள்ளனர். வழக்குரைஞரும் முத்துவின் உறவினருமான நாக சுந்தரம் என்பவரும், ''முத்துவின் தலையிலும் காதுகளுக்குக் கீழேயும் காயங்கள் இருந்ததையும், அவரது மூக்கிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்ததையும் அவரது கையின் புஜப்பகுதி வீங்கிப் போயிருந்ததோடு, உடலெங்கும் காயங்கள் இருந்ததையும் தான் பார்த்ததாக''ப் பத்திரிக்கையாளர்களிடம் கூறியிருக்கிறார்.

இவர்களையெல்லாம்விட மிகவும் நம்பத்தகுந்த சாட்சியம் ஒன்று உள்ளது. ''மயக்கமாக வருவதாகவும், நெஞ்சு வலிப்பதாகவும்'' முத்து கூறியவுடனேயே, அவரை வடபழனியிலுள்ள சூர்யா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாக போலீசார் கூறியுள்ளனர். அம்மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரியான எஸ். ஆனந்தகுமார், ''முத்துவை இறந்துபோன நிலையில்தான் போலீசார் தூக்கி வந்ததாகவும், அவரது தலையிலும் புஜப் பகுதியிலும் கடுமையான காயங்கள் இருந்ததை எமது மருத்துவர்கள் பார்த்ததாகவும்'' டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழிடம் கூறியிருக்கிறார்.

25 பவுன் நகை, 12,000 ரொக்கப் பணத்தைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட முத்துவைக் கைது செய்து, ஓரிரு நாளிலேயே அவரைக் கொன்று 'உடனடி நீதியை' வழங்கியிருக்கிறது, ஜெயாவின் போலீசு. அதேசமயம், தான் முதல்வராக இருந்த சமயத்தில் 66 கோடி ரூபாய் பொதுப் பணத்தைச் சுருட்டியிருக்கிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜெயாவை ஒரேயொருமுறை சாட்சிக் கூண்டில் ஏற்றி விசாரிப்பதற்குள்ளாகவே பதினைந்து ஆண்டுகள் ஓடிவிட்டன; முத்துவை இரத்தம் சொட்டச் சொட்ட கடலூருக்கு இழுத்துச் சென்று விசாரணை நடத்தியிருக்கிறது, தமிழக போலீசு. ஆனால், 66 கோடி ரூபாய் பணத்தைச் சுருட்டிய ஜெயாவோ சாட்சிக் கூண்டில் ஒரு குற்றவாளியைப் போல ஏற்றி நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவில்லை. ஜெயா, அரசு மரியாதை - பாதுகாப்போடு, நீதிபதிக்கு எதிரே ஃபேனுக்கு அடியில் உட்கார்ந்து

போலீசாரால் முத்து அடித்துக் கொல்லப்பட்டதைக் கதறி அழுதபடி பத்திரிக்கையாளர்களிடம் எடுத்துகூறும் அவரது பெற்றோர். (உள்படம்) முத்து.





படிப்பகம்

www.padippakam.com

கொண்டு, நீதிபதியின் கேள்வி களுக்கு அலுங்காமல் குலுங்கா மல் பதில் அளித்திருக்கிறார். முத்து திருட்டுப் பட்டத்தோடு இறந்து போய்விட்டார். ஜெயாவோ முதல்வர் என்ற பந்தா வோடு வலம் வருகிறார்.

•••



மதுரை ஊமச்சிக்குளம் போலீசு நிலையத்திற்குப் புகார் கொடுக்கப் போய்ப் பிணமாகத் திரும்பி வந்த மார்க்கண்டேயன்.

**மு**த்துவின் அகால மரணம், ஜெயா மூன்றாவது முறையாகப் பதவியேற்ற பின், மிகவும் குறு கிய காலத்திற்குள் நடந்துள்ள எட்டாவது கொட்டடிக் கொலை யாகும். அ.தி.மு.க. அரசு பதவியேற்ற பதினைந்தாவது நாளிலேயே, ஜூன் 2 அன்று மார்க்கண்டேயன் என்பவர் மதுரை - ஊமச்சிக்குளம் போலீசு நிலையத்தில் கொல்லப் பட்டார். இத்துணைக்கும் மார்க்கண்டேயன் மீது எந்த வொரு வழக்கோ புகாரோ கிடையாது. தனது பெண் கடத்திச் செல்லப்பட்டதாகப் புகார் கொடுக்கப் போனவர், பிணமாக வீடு திரும்பினார்.

மார்க்கண்டேயன் கொல்லப்பட்ட அடுத்த பதினாறா வது நாளில், ஜூன் 18 அன்று பழனிக்குமார் என்பவர் காரைக்குடி வடக்கு போலீசு நிலையத்திலும்; ஜூலை 3 அன்று சரசுவதி என்பவர் சென்னை ஆர்.கே. நகர் போலீசு நிலையத்திலும்; ஜூலை 7 அன்று சின்னப்பா என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் போலீசு நிலையத்திலும்; ஆகஸ்ட் 11 அன்று சலீம் என்பவர் கோபி போலீசு நிலையத்திலும்; ஆகஸ்ட் 30 அன்று ரமேஷ் என் பவர் பல்லடம் மகளிர் போலீசு நிலையத்திலும்; செப் டம்பர் 3 அன்று குப்புசாமி என்பவர் பெரியநாயக்கன் பாளையம் போலீசு நிலையத்திலும் இறந்து போயுள்ளனர். ஜெயா பதவியேற்ற பின், சராசரியாக பதினைந்து நாளுக்கு ஒருவரை போலீசு கொட்டடியில் வைத்துக் கொன்றிருப்பதை இப்பட்டியல் அம்பலப் படுத்துகிறது.

இக்கொட்டடிக் கொலைகள், பரமக்குடி மற்றும் மதுரையில் தாழ்த் தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட துப் பாக்கிச் சூடு, கோவை துடியலூர் போலீசு நிலையத்தில் ஆனந்தீஸ் வரன் என்ற வழக்குரைஞர் மிருகத்தன மாகத் தாக்கப்பட்டது — என இச்சம் பவங்கள் அனைத்தும் ஜெயாவின் ஆட்சி என்றாலே போலீசு ஆட்சிதான் என்பதை மீண்டும் நிரூபிக்கின்றன. முந்தைய அவரது ஆட்சிகளில் நடந்த சிதம்பரம் பத்மினி பாலியல் வன் முறை மற்றும் பத்மினியின் கணவர் கொட்டடிக் கொலை வழக்கு, கொடி யங்குளம் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல், வாச்சாத்தி வழக்கு போன்ற பல்வேறு அரசு பயங்கரவாத வழக்கு களில் குற்றமிழைத்த கிரிமினல் போலீசாரைக் காப்பாற்ற அவரது ஆட்சி முயன்றதைப் போலவே இப்பொழுதும் அ.தி.மு.க. அரசு நடந்துகொள்கிறது.

பரமக்குடியில் ஆதிக்க சாதி வெறியோடு நடத்தப்பட்ட துப் பாக்கிச் சூட்டை வெளிப்படை யாகவே ஆதிரித்துச் சட்டசபை யில் உரையாற்றினார், ஜெயா. கோவை துடியலூர் வழக்கில் வழக்குரைஞரைத் தாக்கிய போலீ சார் பணியிடை நீக்கம் செய்யப் பட்டாலும், அவர்களுள் யாரும் அக்கொலைவெறித் தாக்குதலுக்காகக் கைது செய்யப்படவில்லை. அக் காக்கிச்சட்டைக் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி கோவை பகுதி வழக்குரைஞர்கள் மாவட்ட போலீசு கண் காணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்திய பிறகும், ஜெயா அரசும், போலீசும் அக்குற்றவாளிகளைச் சிறைக்கு அனுப்பாமல் வெளியே வைத்துக் காப்பதில்தான் குறியாக இருந்து வருகின்றன. சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் சங்கரசுப்புவின் மகன் சதீஷ்குமார் கொலை வழக்கு விசாரணையை முடக் குவதிலும் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதிலும் தமிழக போலீசு உயர் அதிகாரிகள் மும்மரம் காட்டி வருவதும் தற் பொழுது அம்பலமாகியுள்ளது.

இக்கொலையில் கண்ணன், ரியாசுதீன் என்ற இரு போலீசு ஆய்வாளர்களுக்குத் தொடர்பிருப்பதாக சங்கர சுப்பு குற்றம் சாட்டியிருப்பதால், இக்கொலை வழக்கைத் தமிழக போலீசார் விசாரணை செய்தால் உண்மை வெளியே வராது என ஒப்புக்கொண்டு, வழக்கு விசாரணையை மையப் புலனாய்வுத் துறையிடம் உயர் நீதிமன்றம் ஒப்படைத்தது. ஆனாலும், சி.பி.ஐ., தனது விசாரணையைத் தொடங்கி நான்கு மாதங்கள் முடிந்த பிறகும் விசாரணையில் ஒரு சிறி தளவு முன்னேற்றம்கூட எட்டப்பட வில்லை.

வழக்குரைஞர் சங்கர சுப்புவின் மகன் சதீஷ்குமார் (படம்) கொலை வழக்கில் தொடர்புடைய போலீசாரை உயர் அதிகாரிகள் காப்பாற்றி வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.



''தனது மகனின் கொலைக் குக் காரணமான கண்ணன், ரியாசு தீன் என்ற இரு போலீசு ஆய்வாளர் களையும்; இக்கொலை நடந்த பொழுது திருமங்கலம் போலீசு நிலைய ஆய்வாளராக நியமிக்கப் பட்ட சுரேஷ்பாபு தடயங்களை அழித்துக் குற்றவாளிகளைக் காப் பாற்ற முயன்றதையும் சி.பி.ஐ. அதி காரிகள் முறையாக விசாரிக்க முயல வில்லை; வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. இணை இயக்குநர் அசோக் குமாருக்கு நெருக்கமான ஐ.பி.எஸ். அதிகாரிகள் தமிழ்நாட்டில் உள்ளனர். இதில் ஒரு அதிகாரிக்கு



படிப்பகம்

www.padippakam.com

வலது, இடதுமாக இருப்பவர்கள்தான் நான் குற்றஞ்சாட்டும் காவல் ஆய்வாளர்கள். எனவே, இந்த வழக்கை நீர்த்துப்போகச் செய்ய அதிகாரி அசோக்குமார் எல்லா வேலைகளையும் செய்தார். அதனால்தான் புலனாய்வில் தொய்வு ஏற்பட்டது.'' என வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்தியிருக்கிறார், வழக்குரைஞர் சங்கர சுப்பு.



துடியலூர் போலீசு நிலையத்தில் வழக்குரைஞர் ஆனந்தீஸ்ரனை ஹாக்கி மட்டையால் தாக்கிய போலீசாரைக் கைது செய்யக் கோரி கோவை பகுதி வழக்குரைஞர்கள் மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திய போராட்டம். (உள்படம்) வழக்குரைஞர் ஆனந்தீஸ்வரன்.

சி.பி.ஐ விசாரணை குறித்து சென்னை உயர்நீதி மன்றமும் தனது அதிருப்தியைத் தெரிவித்திருப்பதோடு, ''விசாரணையில் முன்னேற்றம் இல்லாதது குறித்து சி.பி.ஐ. இயக்குநர் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் தர வேண்டும். அதற்கு வசதியான தேதியை சி.பி.ஐ. வழக்குரைஞர் கேட்டுத் தெரிவிக்க வேண்டும்'' என உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இவ்வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தும் முகமாகச் சிறப்பு விசாரணைக் குழுவை சி.பி.ஐ. இயக்குநர் அமைக்க உள்ளதாகவும், சி.பி.ஐ. கூடுதல் இயக்குநர் சலீம் அலி இந்தச் சிறப்பு விசாரணைக் குழுவுக்குத் தலைமையேற்க இருப்பதாகவும் சி.பி.ஐ. உயர் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து, வழக்கு விசாரணை நவம்பர் இரண்டாவது வாரத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதுவொருபுறமிருக்க, இக்கொலை வழக்கில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் போலீஸ் ஆய்வாளர்களில் ஒருவர்கூடப் பணியிடை நீக்கம் செய்யப்படவில்லை. குறிப்பாக, தடயங்களை மறைக்கவும், இக்கொலையைத் தற்கொலை எனக் காட்டவும் முயன்ற போலீசு ஆய்வாளர் சுரேஷ் பாபு, தான் விரும்பிய இடத்திற்கு மாறுதல் வாங்கிக் கொண்டு செல்லும் அளவிற்கு போலீசு அதிகாரிகள் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதாக வழக்குரைஞர் சங்கரசுப்பு கூறியிருக்கிறார். உண்மை இவ்வாறிருக்க, தமிழக போலீசோ, வழக்குரைஞர் சங்கர சுப்பு விசாரணைக்கு ஒழுங்காக ஒத்துழைப்பதில்லை; அவருக்கும் இறந்துபோன அவரது மகன் சதீஷ்குமாருக்கும் இடையே சொத்துத் தகராறு இருந்து வந்தது; மன உளைச்சலால்தான் சதீஷ்குமார் தற்கொலை செய்து கொண்டார் எனத் திட்டமிட்டு அவதூறுகளைப் பரப்பி வருகிறது.

• • •

**ஜெ**யா எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த காலத்தில் கூட போலீசின் அட்டூழியங்களுக்கு எதிராக ''சவுண்டு'' விட்டதில்லை. சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் போலீசின் வரம்பற்ற அதிகாரங்களுக்கும், அதனின் சட்ட விரோதக் கொள்ளைக்கும் அட்டூழியங்களுக்கும் வக்காலத்து வாங்குவதில் மற்ற அரசியல்வாதிகளைவிட முன்னணியில் நிற்கும் ஜெயா, ''போலீசின் சட்டவிரோத அட்டூழியங்களுக்காகக்கூட அதனைத் தண்டித்துவிடக் கூடாது; அப்படித் தண்டித்தால், போலீசின் செயல்திறன் குறைந்து போகும்'' என்ற பாசிச சிந்தனையைக் கொண்டவர். அ.தி.மு.க.வின் கடந்த (2001-06) - ஆட்சியின்பொழுது, கஜானா காலியாகிவிட்டதெனக் கூறி, மற்ற துறைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் வெட்டிய ஜெயா, போலீசு துறைக்கு சலுகைகளையும் படிகளையும் உயர்த்தி வாரியிறைத்தார். கருணாநிதியைவிட, தான்தான் போலீசு துறையை நவீனமயமாக்கவும், போலீசாருக்கு வேண்டிய சலுகைகளை அளிக்கவும் பாடுபடுவதாகத் திரும்பத் திரும்பக் கூறி, போலீசின் விசுவாசத்தைத் தன் பக்கம் தக்கவைத்துக் கொள்ளும் கில்லாடி அவர்.

இந்த ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் குறித்த விவாதத்தின்பொழுது, போலீசு துறை மானியம் குறித்துப் பேசிய ஜெயா, தமிழக போலீசை நவீனப்படுத்தப் போவதாகக் கூறி, அதற்குக் கொம்பு சீவி விட்டார். இதற்கு அடுத்த இரண்டொரு நாட்களில்தான் பரமக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தது என்பது தற்செயலானதல்ல. அத்துப்பாக்கிச் சூட்டை நடத்திய போலீசு அதிகாரிகளின் மீது

> "முத்துவை இரத்தம் சொட்டச்சொட்ட கடலூருக்கு இழுத்துச் சென்று விசாரணை நடத்தியிருக்கிறது, தமிழக போலீசு. ஆனால், 66 கோடி ரூபாய் பணத்தைச் சுருட்டிய ஜெயாவோ சாட்சிக் கூண்டில் ஒரு குற்றவாளியைப் போல ஏற்றி நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவில்லை. முத்து திருட்டுப் பட்டத்தோடு இறந்துவிட்டார். ஜெயாவோ முதல்வர் என்ற பந்தாவோடு வலம் வருகிறார்."



படிப்பகம்

www.padippakam.com

வழக்குப் பதிவு செய்யவும், இத்துப்பாக்கிச் சூடு குறித்து நியாயமாக விசாரணை நடத்தவும் மறுத்துவருவதன் மூலம், தான் போலீசின் ஆள் என நிரூபித்திருக்கிறார். வீரப்பனைத் தேடுவது என்ற பெயரில் பாலியல் வன்முறைக் கொடுமைகளையும், போலி மோதல் படுகொலைகளையும் நடத்திய கிரிமினல் போலீசாரைத் தண்டிக்காததோடு, அவர்களுக்குப் பதவி உயர்வுகளையும், பணம், வீட்டு மனை - என சன்மானங்களையும் வாரி வழங்கியவர்தான், ஜெயா. அவரது ஆட்சியில் போலீசார் மீது பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பொழுது, அப்பெண்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு போலீசு மீது பழிபோடுவதாகக் கூறி, போலீசுக்கு வக்காலத்து வாங்கிய வக்கிரப் பேர்வழி அவர்.

> *போலீசின் அட்டூழியங்களுக்கு வக்காலத்து வாங்குவதில் மற்ற அரசியல்வாதிகளைவிட முன்னணியில் நிற்கும் ஜெயா, ''போலீசின் சட்டவிரோத அட்டூழியங்களுக்காகக்கூட அதனைத் தண்டித்துவிடக் கூடாது; அப்படித் தண்டித்தால், போலீசின் செயல்திறன் குறைந்து போகும்'' என்ற பாசிச சிந்தனையைக் கொண்டவர்.*

அதனால்தான் தி.மு.க. ஆட்சியைவிட, பார்ப்பன - பாசிஸ்டான ஜெயாவின் ஆட்சியைத் தமது சொந்த ஆட்சியாகவே தமிழக போலீசு கருதிக் கொண்டுத் தலைகால் புரியாமல் ஆட்டம் போடுகிறது; துப்பாக்கிச் சூடு, கொட்டடிக் கொலை போன்ற அரசு பயங்கரவாத அட்டூழியங்களை எவ்விதத் தயக்கமும் இன்றி நடத்தத் துணிகிறது.

● திப்பு

# தண்ணீர்க் கொள்ளையருக்கு எதிராக....

கடந்த 2008-ஆம் ஆண்டில் விருதை மினரல்ஸ் என்ற நிறுவனம், விருத்தாசலம் நகரிலுள்ள ஆலடிரோடு, எம்.ஆர்.கே.நகர் குடியிருப்புப் பகுதியில் ஆழ்குழாய் கிணறு தோண்டி தண்ணீரை வரைமுறையின்றி உறிஞ்சி வியாபாரம் செய்ய முயற்சித்தது. இதனால் ஆலடி ரோடு பகுதியில் உள்ள எம். ஆர்.கே.நகர், முல்லைநகர், வீ.என்.ஆர்.நகர், ராமதாஸ் நகர் உள்ளிட்ட பல குடியிருப்புப் பகுதிகள் பாலைவனமாகும் அபாயத்தை உணர்ந்த இப்பகுதிவாழ் மக்கள் இத்தண்ணீர்க் கொள்ளையை எதிர்த்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம் எனத் தொடர்ந்து போராடியதையடுத்து இந்நிறுவனம் மூடப்பட்டது. இருப்பினும், இரவில் இரகசியமாகத் தண்ணீரை உறிஞ்சிப் பகலில் குடுவைகளில் தண்ணீரை ஏற்றிச் சென்று வியாபாரம் செய்யும் இத்தண்ணீர்க் கொள்ளை அவ்வப்போது நடந்து வந்தது.



தண்ணீர்க் கொள்ளையருக்கு எதிரான போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம், கடந்த அக்டோபர் மாதத்தில் இந்நிறுவனம் மீண்டும் நிலத்தடி நீரை ஆழ்குழாய் மூலம் உறிஞ்சி விற்பனை செய்ய முயற்சிப்பதை எதிர்த்து இக்குடியிருப்புப் பகுதி முழுவதும் வீடு வீடாக இத்தண்ணீர்க் கொள்ளைக்கு எதிராக பிரச்சாரம் செய்ததோடு, மக்களின் புகார் மனுக்களை அனைத்து அதிகாரிகளுக்கும் அனுப்பி, உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடில் இந்நிறுவனத்தை மக்களைத் திரட்டி மூடுவோம் என எச்சரித்தது. இத்தண்ணீர்க் கொள்ளையருக்கு ஆதரவாகப் பல தரப்பினரும் ம.உ.பா.மையத்துடன் சமரசம் பேச முயன்றனர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் தனது பரிவாரங்களுடன் வந்து, ''நம்ம பையன்தான், இதனால் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை, எதற்காக நீங்கள் எதிர்க்கிறீர்கள்?'' என்று ம.உ.பா.மையத்தின் நிர்வாகிகளிடம் வாதிட்டுப் பார்த்துவிட்டு திரும்பினார்.

கடந்த அக்டோபர் 12-ஆம் தேதியன்று இந்நிறுவனத்தினர் -ற்றுக்கும் மேற்பட்ட பெரிய குடுவைகளில் தண்ணீரை வாகனத்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட போது, ம.உ.பா. மையத்தின் விருத்தாசலம் பகுதியின் தலைவர் குணசேகரன் தலைமையில் இப்பகுதிவாழ் மக்கள் திரண்டு வாகனத்தை மறித்து, ஆலையை முற்றுகையிட்டுச் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தண்ணீர்க் குடுவைகளை கீழே போட்டு உடைத்ததோடு, தண்ணீர்க் கொள்ளை நிறுவனத்தை உடனடியாக மூடக் கோரினர். பின்னர் வட்டாட்சியரும் போலீசு அதிகாரிகளும் போராட்டக் களத்துக்கு வந்து மக்களின் போராட்டத்துக்குப் பணிந்து அந்த ஆலையை மூடி முத்திரையிட்டனர்.

ம.உ.பா.மையத்தின் முன்முயற்சியால் நடந்த இந்தப் போராட்டம், மக்களிடம் பெருத்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதோடு, போராடாமல் தண்ணீர்க் கொள்ளையர்களை விரட்டியடிக்க முடியாது என்பதை உணர்த்துவதாகவும் அமைந்தது.

தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம், விருத்தாசலம்.



படிப்பகம்

www.padippakam.com

## சொத்துக்குவிப்பு வழக்கு:

# நீதிமன்றங்களைத் திணறடித்த ஜெயாவின் வாய்தா புரட்சி!

**ஜெயா கும்பலின் வாய்தா மனுக்கள் விசித்திரமானவையாக இருப்பதோடு, புனிதமாகக் கருதப்படும் சட்டம், நீதித்துறையைக் கேலிக்குரியதாக்கி ஆட்டுவிக்கின்றன.**

''அவரின் பாதுகாப்புக்காக நீதிமன்றம் தற்காலிகமாக இடம் மாற்றப்படுகிறது. அவருக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என உச்ச நீதிமன்றம் கேள்வி கேட்டு, அவருடைய பாதுகாப்பை உறுதி செய்கிறது. அவருடைய பாதுகாப்புக்காக 1,500 முதல் 3,000 போலீசார் வரை குவிக்கப்படுகின்றனர்; சாலையில் தடையரண்கள் ஏற்படுத்தப்பட்டுப் பொதுமக்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுவதோடு, 144 தடையுத்தரவும் பிறப்பிக்கப்படுகின்றது.'' - இவையெல்லாம் பெங்களூருவில் நடந்துவரும் சொத்துக்குவிப்பு வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயலலிதாவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிக் கேள்விகள் கேட்பதற்காகச் செய்யப்பட்டிருந்த தடபுடல் ஏற்பாடுகள். ஜெயா தமிழகத்தின் முதல்வர், இசட் ப்ளஸ் பாதுகாப்பில் இருப்பவர் என்றெல்லாம் கூறி, இப்பாதுகாப்பு ஏற்பாடுகளை நியாயப்படுத்தினாலும், தார்மீகரீதியில் பார்த்தால், பொதுச் சொத்தைக் கொள்ளையடித்துச் சொத்து சேர்த்துக் கொண்ட குற்றவாளிக்கு இத்துணை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதைக் கேட்கும்பொழுது குமட்டல்தான் வருகிறது.

இச்சொத்துக் குவிப்பு வழக்கு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இப்பதினைந்து ஆண்டுகளில் இவ்வழக்கை நடத்திய / நடத்திவரும் நீதிமன்றங்களை மயிருக்குச் சமமாகக்கூட ஜெயா மதித்து நடந்ததில்லை. இந்தியக் குடிமகனைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு சட்டதிட்டத்துக்கும் தான் கட்டுப்பட்டு நடக்க மாட்டேன் என்ற அகங்காரத்தோடும், திமிரோடும் நடந்துவரும் ஜெயாவிற்கு, சட்டப்படியான அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் வழங்க வேண்டும் எனக் கூறுவதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

1991-ஆம் ஆண்டு ஜெயா முதன்முறையாகத் தமிழக முதல்வராகப் பதவியேற்ற பொழுது, அவருக்கிருந்த மொத்த சொத்துக்களின் மதிப்பு இரண்டு கோடியே ஒரு இலட்சத்து எண்பத்து மூவாயிரம் ரூபாய் (ரூ.2,01,83,000) என அறிவிக்கப்பட்டது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் அவருடைய மொத்த சொத்து மதிப்பு அறுபத்து ஆறு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் ரூபாய் (ரூ.66,44,73,000) என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஜெயாவின் சொத்து மதிப்பு ஐந்து ஆண்டுகளில் 33 மடங்கு அதிகரித்திருப்பதை அசாதாரணமானது என்ற வார்த்தைக்குள்கூட அடக்கிவிட முடியாது. இத்துணைக்கும் அந்த ஐந்து ஆண்டுகளில் ''தான் வெறும் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு தமிழக முதல்வர் என்ற கடமையை ஆற்றியதாக''ப் பீற்றிக் கொண்டவர், ஜெயா. எனவே, அவர் முதல்வராக இருந்த அந்த ஐந்து ஆண்டுகளில் பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்காமல், கிம்பளம் வாங்காமல் அவரது சொத்து மதிப்பு 33

சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள குற்றவாளிகள் (கடிகாரச்சுற்றுப்படி) ஜெயா, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன்.





படிப்பகம்

www.padippakam.com

மடங்கு அதிகரித்திருக்க முடியாது. இதுதான் இச் சொத்துக் குவிப்பு வழக்கின் சாரம்.

இதன் அடிப்படையில் 1996, டிசம்பரில் ஜெயா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நால்வர் மீது வழக்குத் தொடுத்த அன்றைய தி.மு.க. அரசு, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியோடு இவ்வழக்கை விசாரிக்கத் தனி நீதிமன்றத்தையும் அமைத்தது. தமிழகத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுதே, 2001-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வென்று, ஜெயா மீண்டும் தமிழக முதல்வர் ஆனார். அச்சமயத்தில் தனி நீதிமன்றம் சாட்சிகள் அனைத்தையும் விசாரித்து முடித்துவிட்டு, ஜெயாவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டது. ''தனக்குத் தொண்டை கட்டிக் கொண்டுவிட்ட காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது'' என்ற நகைக்கத்தக்க, அலட்சியமான காரணத்தை முன்வைத்துக் கூண்டில் ஏறிநிற்க மறுத்துவிட்ட ஜெயா, ''நீதிமன்றம் தன்னிடம் கேட்கவேண்டிய கேள்விகளைத் தனது வீட்டிற்கு அனுப்பி வைத்தால் பதில் எழுதித் தருவதாக''க் கூறினார். ஜெயாவின் கூற்றுக்குப் பொருள் என்னவென்று அறிந்திருந்த நீதிபதி, தனது பெஞ்ச் கிளார்க்கை கேள்விகளோடு போயஸ் தோட்டத்து பங்களாவிற்கு அனுப்பி வைத்தார். இல்லையென்றால், அ.தி.மு.க. மகளிர் அணியின் ஆபாச ஆர்ப்பாட்டமோ, உருட்டுக்கட்டையோ, கஞ்சா வழக்கோ அவரைத் தேடி வந்திருக்கும்.

ஜெயாவின் விளையாட்டுப் பொம்மை போலத் தனி நீதிமன்றமும், சாட்சிகளும் உருட்டப்பட்டதையடுத்து, தி.மு.க.வின் பொதுச்செயலாளர் அன்பழகன் இவ்வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி இவ்வழக்கு 2004-ஆம் ஆண்டு கர்நாடகா மாநிலத்திற்கு மாற்றப்பட்டு, வழக்கை விசாரிக்க பெங்களூருவில் சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்பட்டது.

இதன் பின் இந்த வழக்கில் தாம் நேரடியாக ஆஜராகாமல் தப்பித்துக் கொள்வதற்கும், வாய்தா கேட்டு வழக்கு விசாரணையைத் தள்ளிவைப்பதற்கும், வழக்கிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும், வழக்கையே அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கும் எனக் கடந்த ஏழாண்டுகளில் 130-க்கும் மேற்பட்ட மனுக்களையும், வழக்குகளையும் சிறப்பு நீதிமன்றம், கர்நாடகா உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என மாறிமாறி தொடுத்தது, ஜெயா கும்பல். அக்கும்பல் இதற்காக முன்வைத்த வாதங்கள் விசித்திரமானவையாகவும், வினோதமானவையாகவும் இருந்ததோடு மட்டுமின்றி, சட்டம், நீதித் துறையைக் கேலிக்குரியதாக்கி ஆட்டுவித்தன. இந்நீதிமன்றங்கள் பல நேரங்களில் ஜெயா கும்பல் முன்வைத்த கோரிக்கைகளுக்குத் தலையாட்டித் தம்மைத்தாமே கோமாளிகளாகவும் காட்டிக் கொண்டன.

ஜெயாவின் காண்வென்ட் ஆங்கிலத் திமிர் ஊர் அறிந்த ஒன்று. அப்படிபட்ட ஜெயா வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு குற்றப்பத்திரிகையைத் தமிழில் மொழி பெயர்த்துத் தர வேண்டும் எனச் சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். சிறப்பு நீதிமன்றம் இம்மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டாலும், கர்நாடகா உயர் நீதிமன்றம் ஜெயாவிற்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது.



அடித்த கொள்ளை எவ்வளவு என்பதைக் காட்டும் ஆதாரங்கள்: உடம்பெங்கும் தங்க, வைர நகைகளோடு ஜெயா மற்றும் சசி. ஜெயாவின் போயசு தோட்டத்து பங்களாவில் கைப்பற்றப்பட்ட தங்க, வைர நகைகள் மற்றும் விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள்.

குற்றப்பத்திரிகைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரப்பட்ட பின், ''அதனைப் படிக்கத் தமக்கு கால அவகாசம் தர வேண்டும்; அதுவரை வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும்'' என ஜெயா கும்பல் அடுத்த மனுவைத் தாக்கல் செய்ய, அதன்படி அவருக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால அவகாசம் முடிந்த பின், ''குற்றப்பத்திரிகையில் பிழைகள் உள்ளன; அதைத் திருத்தம் செய்துதர வேண்டும்'' என மற்றொரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனுவைச் சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட, அத்தீர்ப்பை எதிர்த்து கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது, ஜெயா கும்பல். ''வழக்கு விசாரணை நடக்கும்பொழுது தவறு



படிப்பகம்

களைத் திருத்திக் கொள்ள லாம்'' எனத் தீர்ப்பளித்து விசாரணையைத் தொடங்குமாறு உத்தரவிட்டது, கர்நாடகா உயர் நீதிமன்றம்.

இச்சமயத்தில் இவ்வழக்கை காலவரையறையின்றி இழுத்தடிக்கும் நோக்கத்தோடு ஜெயா கும்பல் தம் மீதான சொத்துக் குவிப்பு வழக்கையும், இலண்டன் அருகேயுள்ள தீவு ஒன்றில் உல்லாச விடுதி வாங்கிப் போட்ட வழக்கையும் ஒன்றாக இணைக்கக் கோரி மனு தாக்கல் செய்ய, அதனைச் சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, இரண்டு வழக்குகளையும் இணைத்து உத்தரவிட்டது. தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் இந்த இணைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க, சிறப்பு நீதிமன்ற விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் 2005-ஆம் ஆண்டு விதித்த இந்தத் தடையை நான்கு ஆண்டுகள் வரை சவ்வாக இழுத்து, அதன் மூலம் ஜெயா கும்பலுக்கு மனு போடும் வேலையைக் கணிசமாகக் குறைத்து வைத்தது. எனினும், 2009-இல் சொத்துக் குவிப்பு வழக்கும் இலண்டன் உல்லாச விடுதி வழக்கும் இணைக்கப்பட்டதை ரத்து செய்து உத்தரவிட்டது, உச்ச நீதிமன்றம்.

## வாய்தாவுக்கு மேல் வாய்தா!

| | |
|---|---|
| பிப்.24, 2003 | நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டதற்கு, தொண்டை சரியில்லாததால் நேரில் வர முடியாது; கேள்விகளை வீட்டிற்குக் கொடுத்தனுப்பும்படி பதில் அளித்தார், ஜெயா. |
| ஜூன் 21, 2004/ ஆக.2, 2004 | குற்றப்பத்திரிக்கையைத் தமிழில் மொழிபெயர்த்துத் தர வேண்டும் எனக் கோரி ஜெயா, சசிகலா, இளவரசி, சுதாகரன் சார்பில் முதலில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்திலும், பின்னர் கர்நாடகா உயர் நீதிமன்றத்திலும் மனுக்கள் தாக்கல். |
| 2004 அக். - நவ. | மொழிபெயர்க்கப்பட்ட குற்றப்பத்திரிக்கையைப் படிக்கக் கால அவகாசம் கேட்டு மனு தாக்கல். |
| ஜூலை 15, 2010 | குற்றப்பத்திரிக்கையை ஆங்கிலத்தில் கேட்டு ஜெயா சார்பிலும், பின்னர் சுதாகரன் சார்பிலும் மனுக்கள் தாக்கல். |
| 2010 அக். - நவ. | மொழிபெயர்ப்பாளரைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி முதலில் சிறப்பு நீதிமன்றத்திலும், பின்னர் கர்நாடகா உயர் நீதி மன்றத்திலும் ஜெயா மனு தாக்கல். |
| ஜன. 4, 2011 | தனக்கு ஆஜராகும் வக்கீல்களில் ஒருவரின் தந்தை காலமாகி விட்டதால், வழக்கு விசாரணையை 3 வார காலம் தள்ளிவைக்கக் கோரி சுதாகரன் சார்பில் மனு தாக்கல். |
| ஜன.27, 2011 | குற்றப்பத்திரிக்கையில் உள்ள தவறுகளைக் கண்டுபிடிப்பதற்காக விசாரணையை 6 மாதங்கள் தள்ளி வைக்க வேண்டுமென முதலில் ஜெயாவும், அவரைத் தொடர்ந்து சசிகலா, இளவரசி, சுதாகரன் சார்பிலும் மனுக்கள் தாக்கல். |
| 2011, பிப். | குற்றப்பத்திரிக்கை மொழிபெயர்ப்பில் தவறு இருப்பதாகக் குறிப்பிட்டு கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் ஜெயாவின் சார்பில் மனு தாக்கல். |
| 2011, ஜூன் | வழக்குரைஞரை மாற்ற இருப்பதால் வழக்கு விசாரணையை நான்கு வாரங்களுக்கு ஒத்திவைக்கக் கோரி ஜெயாவின் சார்பில் மனு தாக்கல். |

இடைக்கால தடை நீக்கப்பட்டு, பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை மீண்டும் தொடங்கியவுடனேயே, ''சொத்துக் குவிப்பு வழக்கைத் தொடர உரிய அனுமதி பெறவில்லை'' எனக் கூறி, வழக்கை அதன் தொடக்கப் புள்ளிக்கே இழுத்துச் செல்ல முயன்றது, ஜெயா கும்பல். இம்மனு தள்ளபடி செய்யப்பட்ட பின், ''தமக்கு அளிக்கப்பட்ட சம்மன் உத்தரவை மாற்ற வேண்டும்; சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் விசாரணை அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும்; குற்றப்பத்திரிகை நகலின் 3 பிரதிகளைத் தர வேண்டும்; ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை நகலைத் தர வேண்டும்; மொழிபெயர்ப்பாளரைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும்'' என உப்புசப்பில்லாத பல காரணங்களை முன்வைத்து 2010-ஆம் ஆண்டில் மட்டும் 30 மனுக்களைச் சிறப்பு நீதிமன்றத்திலும், அதன் பின் கர்நாடகா உயர் நீதிமன்றத்திலும் மாற்றிமாற்றி, குற்றம்சாட்டப்பட்ட நால்வரும் ஒருவர் பின் ஒருவராகத் தாக்கல் செய்து, வழக்கு விசாரணைக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தது, ஜெயா கும்பல்.

2011-ஆம் ஆண்டில் முதல் ஏழு மாதங்களுக்குள்ளாகவே, சாட்சியங்களிடம் நடத்தும் விசாரணையை முடக்கும் நோக்கத்தோடு 23 மனுக்கள் ஜெயா கும்பலால் தாக்கல் செய்யப்பட்டன. குறிப்பாக, குற்றவாளிகளுள் ஒருவரான சுதாகரன், ''தனது வழக்குரைஞரின் தந்தை காலமாகிவிட்டதால் வழக்கு விசாரணையை மூன்று வாரத்துக்குத் தள்ளி வைக்க வேண்டும்'' என விசித்திரமான கோரிக்கையோடு மனு தாக்கல் செய்தார். வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயா, ''குற்றப்பத்திரிக்கையில் உள்ள தவறுகளைக் கண்டுபிடிப்பதற்காக விசாரணையை ஆறு மாத காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும்'' என மனு தாக்கல் செய்தார். இம்மனுக்கள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின், தமிழகச் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி விசாரணையைத் தள்ளிவைக்கக் கோரினார், ஜெயா.

ஆடிக்காற்றில் குப்பை பறந்துபோய் கோபுரத்தில் ஒட்டிக் கொள்வதைப் போல, தமிழக மக்களால் மீண்டும்

www.padippakam.com



குற்றவாளிக்கு ராஜமரியாதை: பெங்களூரு சிறப்பு நீதிமன்ற விசாரணைக்கு வந்த ஜெயாவிற்கு அளிக்கப்பட்ட போலீசு பாதுகாப்பு.

முதல்வர் பதவியில் உட்கார வைக்கப்பட்ட ஜெயா, இந்த வாய்ப்பை சொத்துக் குவிப்பு வழக்கை ஒழித்துக் கட்டும் முயற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார். குறிப்பாக, தமிழக அரசின் சார்பாக வழக்கை நடத்தி வந்த இலஞ்ச ஒழிப்புத் துறை, ''இவ்வழக்கின் சாட்சியங்கள் அனைத்தையும் மீண்டும் விசாரிக்க வேண்டும்'' எனக் கோரி, இவ்வழக்கின் அரசு வழக்குரைஞரான பி.வி.ஆச்சார்யாவுக்குத் தெரியாமலேயே சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. சிறப்பு நீதிமன்றத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்ட பின் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் இத்தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசே வழக்குத் தொடுத்தது. ''கர்நாடகா உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அரசு வழக்குரைஞர் பி.வி. ஆச்சார்யாவைத் தவிர்த்து வேறு யாரும் இவ்வழக்கில் ஆஜராகக் கூடாது; தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை சாட்சியங்களிடம் மறு விசாரணை நடத்தக் கூடாது'' என உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது.

இத்துணை தடைகளையும் தாண்டி சாட்சியங்களிடம் விசாரணை முடிந்து குற்றவாளிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகிப் பதில் அளிக்கும்படி சிறப்பு நீதிமன்றம் அளித்த உத்தரவை ஜெயா கும்பல் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. முதல் குற்றவாளியான ஜெயா, தான் தமிழக முதல்வராக இருப்பதையும் பாதுகாப்புக் காரணங்களையும் காட்டித் தப்பித்துக் கொள்ள முயன்றார். ''கோயில் குளத்திற்கெல்லாம் போக முடிந்தவருக்கு நீதிமன்றத்துக்கு வர முடியாதோ?'' என அரசு வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா கேள்வி எழுப்பி, ஜெயாவின் தகிடுதத்தத்தை அம்பலப்படுத்தினார். சசிகலாவும், இளவரசியும், ''தாம் பெண் என்ற காரணத்தை'' முன்வைத்துத் தப்பித்துக் கொள்ள முயன்றனர். 2-ஜி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கனிமொழி பெண் என்ற காரணத்தைக் கூறி பிணை கோரியபொழுது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற வாதத்தை முன்வைத்து கனிமொழியைக் கடுமையாகக் கண்டித்த தமிழகப் பார்ப்பனக் கும்பல், இப்பொழுதோ வாய் மூடிக் கிடந்தது.

இந்தச் சொத்தை வாதங்களைச் சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்தவுடன், உச்ச நீதிமன்றத்தை அணுகினார், ஜெயா. ''எனது கட்சிக்காரருக்குப் பல்வேறு அச்சுறுத்தல்கள் உள்ளன. பல முக்கியமான வேலைகள் இருக்கிறது. அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு எழுத்துபூர்வமாகவோ, வீடியோ கான்பரன்சிங் மூலமோ பதில் அளிக்கிறேன் எனச் சொல்வதில் என்ன தவறு?'' எனத் தனது வழக்குரைஞர் மூலம் திமிராக வாதம் புரிந்தார், ஜெயா. இதற்கு, ''குற்றவாளிகள் சொல்லும் கதைகளையெல்லாம் கேட்க வேண்டுமென்ற அவசியம் இல்லை'' என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பதில் அளித்தாலும், ''அவருக்கு வசதியான தேதியில் ஆஜராகும்படி'' ஜெயாவிற்கு சலுகை அளித்தனர். டான்சி நில மோசடி வழக்கில் ஜெயாவைத் தண்டிக்காமல், அவர் தனது மனசாட்சிபடி நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்திய உச்ச நீதிமன்றத்திடம் இதற்கு மேல் வேறெதையும் எதிர்பார்க்க முடியாது.

இந்த அடிப்படையில்தான் ஜெயாவிற்கு வசதியான அக்டோபர் 20 அன்று பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் அவர் நேரில் ஆஜராகி, வழக்கு தொடர்பான கேள்விகளுக்கு நீதிபதியிடம் பதில் அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. இதனையும் முடக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தில்தான், தனக்கு வழங்கப்படும் இசட் ப்ளஸ் பாதுகாப்பைக் காட்டி, சிறப்பு நீதிமன்றத்தில் தான் நேரில் ஆஜராவதைத் தள்ளிப் போடக் கோரி மீண்டும் மனு தாக்கல் செய்தார், ஜெயா. உச்ச நீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்த பிறகு, வேறு வழியின்றி, அக்.20 மற்றும் 21 தேதிகளில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி, பெரும்பாலான கேள்விகளுக்கு, ''தெரியாது'', ''நினைவில் இல்லை'' என்றே பதில் அளித்திருக்

> **ஜெயா நீதிமன்றத்தையும், சட்டத்தையும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்பதை இவ்வழக்கு நெடுகிலும் காண முடியும். இப்படிபட்ட நபரை, தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கைக் காக்க வந்த அவதாரமாக தமிழக மக்களின் முன் தமிழகப் பார்ப்பனக் கும்பல் நிறுத்தியிருப்பது எத்துணை பெரிய மோசடி!**



படிப்பகம்

www.padippakam.com

கிறார், ஜெயா. நவம்பர்8அன்று விசாரணைக்காக மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென ஜெயாவிற்குச் சிறப்பு நீதிமன்றம் உத்திரவிட்டவுடன், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.

இந்த வழக்கில் ஜெயா தண்டிக்கப்படுவாரா, மாட்டாரா என்பதை விடக் கவனிக்கத்தக்க முக்கிய விசயம் வேறொன்று உள்ளது. ஜெயா பதவியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர் நீதிமன்றத்தையும், சட்டத்தையும் ஒரு பொருட்டாக மதித்ததில்லை என்பதை இவ்வழக்கு நெடுகிலும் காண முடியும். இப்படிபட்ட நபரை, தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கைக் காக்க வந்த அவதாரமாக தமிழக மக்களின் முன் தமிழகப் பார்ப்பனக் கும்பல் நிறுத்தியிருப்பது எத்துணை பெரிய மோசடி!

ஜெயாவின் இந்தக் கல்யாண குணங்கள் தெரிந்திருந்தும், உச்சநீதிமன்றம்கூட, ''உங்கள் கட்சிக்காரர் வழக்கை இழுத்தடிக்க முயற்சிக்கிறார்'' என்பதற்கு மேல் இந்த வழக்கு விசாரணையின்பொழுது அவரை வேறுவிதமாகக் கடிந்து கொண்டதில்லை. ஜெயா திருந்திவிட்டார், மாறிவிட்டாரென்று கூப்பாடு போட்ட பத்திரிக்கைகள் அனைத்தும், அவரது இந்த இழுத்தடிப்புப் பற்றி மட்டுமல்ல, அவர் சொத்து குவித்த விதம் குறித்தும் வாய் மூடியே கிடந்தன. குறிப்பாக, ஜெயாவின் மீது சொத்துக் குவிப்பு வழக்கு தொடர வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்குப் போட்ட சுப்பிரமணிய சுவாமியோ சட்டமன்றத் தேர்தலில் ஜெயாவோடு கூட்டணி கட்டிக் கொள்ள போயசு பங்களா வாசலில் தவம் கிடந்தார். மற்ற செல்வாக்குகளைவிட, ஜெயாவின் சாதி அரசியல் செல்வாக்குதான் அவருக்குக் கேடயமாக இருந்து வருகிறது என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? 2-ஜி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆ.ராசாவிற்கும், கனிமொழிக்கும் கிடைக்க வாய்ப்பேயில்லாத செல்வாக்கல்லவா, இது?

● செல்வம்



## உர விலையேற்றம்:
# விவசாயத்தைச் சூறையாடும் தனியார்மயத் தாக்குதல்

இந்திய விவசாயம் பெரும்பாலும் இரசாயன உரங்களையே நம்பியுள்ளது. போதிய அளவு மழை பெய்திருந்தாலும், தற்போது உரத் தட்டுப்பாடு - விலையேற்றத்தால் இந்திய விவசாயிகள் தத்தளிக்கின்றனர். குறிப்பாக, காவிரி டெல்டா மாவட்டங்களின் தற்போதைய சம்பா நெல் சாகுபடி கடுமையான உரத் தட்டுப்பாட்டில் சிக்கியுள்ளது. பயிருக்கு மணிச்சத்தும் தழைச்சத்தும் கிடைக்க சம்பா நெல் நடவுப் பணியின் போது டி.ஏ.பி. உரம் அடியுரமாக இடப்படும். ஆனால் டி.ஏ.பி. உரம் கிடைக்காமலும், உரத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாலும் பெரும் அவதிக்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர். கடந்த ஆண்டு 50 கிலோ எடை கொண்ட டி.ஏ.பி. உரம் ரூ.585-க்கு விற்பனை செய்யப்பட்டது. இது தற்போது ரூ.825 வரை விற்கப்படுகிறது. மேலும் உயரும் என்று கூறப்படுகிறது. டி.ஏ.பி. உரத்தில் ஏற்கெனவே 18:46 என்ற அளவில் இருந்த மணிச்சத்து, தழைச்சத்து விகிதம் தற்போது 16:44 என்ற அளவில் உரக் கம்பெனிகளால் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கெனவே 100 கிலோ பயன்படுத்தப்பட்ட இடத்தில், தற்போது 110 கிலோ உரத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என்ற மூன்று வகையான உரங்கள் விவசாயத்திற்கு அடிப்படையான உரங்களாகும். இதில் முதலிரண்டு வகை உரங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. சாம்பல் சத்து எனப்படும் பொட்டாஷ் உரம் மட்டும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் உரங்களுக்கு, ஆண்டுதோறும் பல்லாயிரம் கோடி ரூபாய்களை மானியமாக ஒதுக்கும் இந்திய அரசு, அவற்றை உர நிறுவன முதலாளிகளிடமே நேரடியாகக் கொடுத்து வருகிறது.

இதுவரை உரங்களின் விலையைக் கட்டுப்படுத்தி வந்த இந்திய அரசு, இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், சௌமித்ரா சௌத்திரி கமிட்டியின் பரிந்துரையின் பேரில் உரங்களின் விலைகளை உரக் கம்பெனிகளே தீர்மானித்துக் கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து, உர நிறுவன பெருமுதலாளிகள் இணைந்து உருவாக்கியுள்ள தங்களது கூட்டமைப்பின்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் (கார்ட்டெல்கள்) உரங்களின் விலையைத் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றியுள்ளனர். ஒரு மூட்டை டி.ஏ.பி.யின் விலை ரூ. 480-லிருந்து ரூ.900-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. யூரியாவின் விலையும் பத்து சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.




இது மட்டுமின்றி, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொட்டாஷை கள்ளச் சந்தைக்காரர்கள் பதுக்கிக் கொண்டு, செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பொட்டாஷின் விலையை ரூ. 290-இலிருந்து ரூ. 450-ஆக உயர்த்தியுள்ளனர். கலப்பு உரம் தயாரிக்க பொட்டாஷ் அத்தியாவசியமென்பதால், கலப்பு உரத்தின் விலை ரூ. 320-லிருந்து ரூ. 720-ஆக, அதாவது இருமடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும் 26 உர நிறுவனங்கள் பொட்டாஷ் சேர்க்காமலேயே கலப்பு உரம் என்று சொல்லி விவசாயிகளிடம் மோசடி செய்து விற்றுள்ளன.

சிமென்ட் கம்பெனிகள் எவ்வாறு கார்டெல் அமைத்துக் கொண்டு அரசையும் மக்களையும் ஆட்டிப் படைக்கின்றனவோ, அதேபோலத்தான் இன்றைக்கு உரக் கம்பெனி கார்டெல்களும் செயல்படுகின்றன. உர நிறுவனங்கள் மட்டுமன்றி, உர விற்பனை ஏஜென்சிகளும் விவசாயிகளைச் சுரண்டிக் கொழுக்கின்றன. இந்தத் திடீர் விலை உயர்வைப் பயன்படுத்தி உரங்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு, செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கியும், பதுக்கிய உரங்களை மிக அதிக விலையில் விற்றும் கொள்ளை லாபமடிக்கின்றனர். இவ்வாறு கந்து வட்டிக்காரன் போல உரமுதலாளிகளும், ஏஜென்டுகளும் இந்திய விவசாயிகளை ஒட்டச் சுரண்டுகின்றனர்.

இந்திய அரசு, விவசாயிகளின் நலனைக் காப்பதாகக் கூறிக் கொண்டு ஆண்டுதோறும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் வரை உர மானியமாக உரக் கம்பெனிகளுக்குக் கொடுக்கிறது. இதுவும் போதாதென்று, மோசடியான கணக்குகளைக் காட்டி உரக் கம்பெனிகள் கோடிகோடியாக ஊழல் செய்திருப்பதை மத்திய தணிக்கைக் கட்டுப்பாட்டு அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. ஆனாலும், உர முதலாளிகளின் கொள்ளைக்குக் கூட்டாளியாக உள்ள அரசு, இவர்கள் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

‘‘கடந்த இரண்டு ஆண்டுகளாக உரம் தொடர்பாக மத்திய அரசு எடுத்து வரும் கொள்கை முடிவுகள் அரசுக்கும் உர உற்பத்தியாளர்கள் மற்றும் கள்ளச்சந்தைக்கும் உள்ள இரகசிய தொடர்பைக் காட்டுவதாக உள்ளது’’ என்று சி.பி.எம். கட்சியின் விவசாய சங்கத் தலைவர் வரதராஜன் கூறுகிறார்.

உற்பத்திச் செலவைவிடக் கூடுதலாக 50 சதவீத விலையை வேளாண் உற்பத்திப் பொருட்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று தேசிய விவசாயிகள் ஆணையம் அரசுக்குப் பரிந்துரைத்தது. அதன்படி பார்த்தால், ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2,000 ரூபாய் வரை அரசு தர வேண்டும். ஆனால், தற்போது நெல்லுக்குக் கிடைப்பதோ குவிண்டாலுக்கு ரூ. 1,100 மட்டும்தான். நெல்லுக்கும் வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கும் உரிய விலை நிர்ணயம் செய்ய மறுக்கும் அரசு, உர முதலாளிகளின் பரிந்துரைகளை மட்டும் உடனே ஏற்றுச் செயல்படுத்துகிறது.

விவசாயத்திற்கு வழங்கப்பட்டுவரும் மானியங்களைப் படிப்படியாகக் கைவிடுவது என்ற தனியார்மயக் கொள்கையை ஏற்று நடத்திவரும் அரசு, இப்போது உர விலையை முதலாளிகளே தீர்மானித்துக் கொள்ளையடித்துக் கொள்ள தாராளமாக அனுமதித்துள்ளது. இந்நிலையில், சில விவசாய சங்கங்கள் உரத்திற்கான மானியத்தை விவசாயிகளிடமே கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கின்றன. முதலாளிகளுக்குக் கொள்ளையடிக்க சுதந்திரம் கொடுத்துவிட்டு, மானியத்தை விவசாயிகளிடம் கொடு என்பது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதைப் போலத்தான்.

ஏற்கெனவே தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் (100 நாள் வேலைத் திட்டம்) காரணமாக விவசாய வேலைகள் செய்ய ஆட்கள் கிடைப்பது அரிதாகி வருவதால், சிறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காமலும், விலை வீழ்ச்சியாலும் கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். சென்ற ஆண்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.14 ஆயிரம் விற்ற மஞ்சளின் விலை இந்த ஆண்டு ரூ.4 ஆயிரம்தான். இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளைச் சுமந்து கொண்டிருக்கும் விவசாயிகளின் முதுகில் பாறாங்கல்லை ஏற்றி வைத்தது போல, வரைமுறையற்ற உர விலைக் கொள்ளை எனும் புதிய தாக்குதலை விவசாயிகளின் மீது இந்திய அரசு தொடுத்துள்ளது. விவசாயிகள் விவசாயத்தை விட்டு ஓட்டம்பிடிக்கும் வண்ணம் தனியார்மயமும் தாராளமயமும் சேர்ந்து தொடுத்திருக்கும் இத்தாக்குதலை முறியடிக்காமல், இந்தியாவின் ஆகப் பெரும்பான்மையான விவசாயிகளையோ, விவசாயத்தையோ காப்பாற்ற முடியாது.

● அழகு



படிப்பகம்

www.padippakam.com

## மோடியின் குஜராத்:

# காவி கிரிமினலின் தலைமையில் காக்கி கிரிமினல்கள்

**மோடியும் அவரை ஆதரிக்கும் பார்ப்பனக் கும்பலும் கடைந்தெடுத்த கிரிமினல் பேர்வழிகள் என்பதை சஞ்சீவ் பட் கைது உள்ளிட்ட விவகாரங்கள் அம்பலப்படுத்திவிட்டன.**

அடுத்த பிரதமராக வருவதற்குத் தகுதியானவர் என்று அம்பானி போன்ற யோக்கியர்களால் சிபாரிசு செய்யப் பட்டவரும், ஊழலற்ற ஆட்சி நடத்துகிறாரென அன்னா ஹசாரேவால் புகழப்பட்டவரும், திறமையான நிர்வாகி என்று சோ ராமஸ்வாமி அய்யருடைய பாராட்டைப் பெற்றவரும், அனைத்துக்கும் மேலாக ஜெயலலிதாவின் அன்புச்சகோதரருமான நரேந்திர மோடியை, 'கிரிமினல்' என்று தொலைக்காட்சி பேட்டிகளில் குற்றம் சாட்டி வரு கிறார், மோடியினால் கைது செய்யப்பட்ட குஜராத் போலீசு அதிகாரி சஞ்சீவ் பட்.

மதநல்லிணக்கவாதி போலவும், மக்களின் நல்வாழ்வு தவிர, வேறு சிந்தனையே இல்லாத மனிதாபிமானி போலவும், வாடிய பயிரைக் கண்டு வாடும் வள்ளலாரா கவும் தன்னைப் பற்றிய ஒரு சித்திரத்தை உருவாக்கி, தனது இனப்படுகொலைக் குற்றத்தை மறைத்து விடலாம் என்று கனவு கண்டு வரும் மோடிக்கு சஞ்சீவ் பட்டின் இந்தக் கூற்று ஒரு செருப்படி. சொல்லப்போனால், சஞ்சீவ் பட்டைச் சிறை வைத்ததன் விளைவாக மோடியின் குற்றங்கள்தான் புதிய வேகத்துடன் அம்பலமாகத் தொடங்கியிருக்கின்றன.

ஐ.பி.எஸ். அதிகாரி சஞ்சீவ் பட், மோடியின் குற்றத்தை நிரூபிக்க முயன்ற ஒரே காரணத்துக்காக, குஜராத் அர சினால் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் பொய்வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையிலும் வைக்கப்பட்டவர். 2002 இனப் படுகொலையின்போது அவர் அகமதாபாத் நகரின் உளவுத்துறை இணை ஆணையர். குஜராத் இனப்படுகொலை தொடங்கிய நாளான பிப்.27, 2002 அன்று மோடி நடத் திய உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டவர். ''இந்துக்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்துவதைத் தடுக்கா தீர்கள்'' என்று மோடி அந்தக் கூட்டத்தில் வெளிப்படையாகவே உத்தரவிட்டதை, உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புல னாய்வுக் குழுவிடம் பட் சாட்சியமளித் தார். அந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுவும் மோடிக்கு ஆதரவாகச் செயல்படவே, தனது சாட்சியத்தையே உச்ச நீதிமன்றத் தில் பிரமாண வாக்குமூலமாக அவர் தாக்கல் செய்தார்.

தற்போது உச்ச நீதிமன்றத்தால் அமிகஸ் கியூரேவாக (நீதிமன்றத்தின் நண்பராக) நியமிக்கப்பட்ட ராஜு ராமச் சந்திரன், மோடியைக் குற்றத்திலிருந்து விடுவிக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை நிராகரித் திருக்கிறார். ''சஞ்சீவ் பட்டின் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது. அவரையும் பிற மூத்த போலீசு அதிகாரி களையும் விசாரித்த பிறகுதான் மோடி குற்றவாளியா, இல்லையா என்ற முடிவுக்கு வர முடியும். முஸ்லிம் களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்த நாட்களில், அகம தாபாத் போலீசு கட்டுப்பாட்டு அறையில் இரண்டு அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள் என்ற உண்மை சஞ்சீவ் பட்டின் குற்றச்சாட்டுக்கு வலுச் சேர்க்கிறது'' என்று தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

''பிப். 27 கூட்டத்தில் சஞ்சீவ் பட் கலந்து கொள்ளவே இல்லை'' என்பது மோடியின் வாதம். இக்கூட்டத்திற் கான வருகைப்பதிவேடு அல்லது கூட்டக் குறிப்புகளைக் காட்டித் தனது கூற்றை மோடி நிரூபிக்க வேண்டும். ஆனால், அத்தகைய ஆவணங்கள் எதுவும் இல்லை. இனப்படுகொலைக் காலத்தின் பல ஆவணங்களைப் போலவே இவையும் மோடி அரசால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், சஞ்சீவ் பட்டின் கார் ஓட்டுனர் பந்த், மேற்சொன்ன கூட்டத்துக்கு சஞ்சீவ் பட்டை அழைத்துச் சென்றதாக ஏற்கெனவே வாக்குமூலம் அளித்திருந்ததால்,

சிறையிலிருந்து பிணையில் வெளியே வரும் போலீசு அதிகாரி சஞ்சீவ் பட்டை வரவேற்கும் பட்டின் மனைவி மற்றும் அவரது நண்பர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

அந்த ஓட்டுனரின் மீது தனது கவனத்தைத் திருப்பியது மோடி அரசு.

''சஞ்சீவ் பட் தன்னை மிரட்டி மோடிக்கு எதிராகப் பொய் வாக்கு மூலம் வாங்கிவிட்டதாக'' அந்த ஓட்டுநரிடம் புகார் எழுதி வாங்கி, அந்தப் புகாரின் அடிப்படையில் சஞ்சீவ் பட்டைச் சிறை வைத்தார், மோடி. இப்படியொரு பொய்ப்புகாரைக் கொடுப்பதற்கு அந்த ஓட்டுனரைத் தூண்டியதாக குஜராத் காங்கிரசு தலைவர் அர்ஜுன் மோத்வாடியா, காங்கிரசின் சட்டத்துறைத் துணைத்தலைவர் விஜய் கினாரா ஆகியோர் மீதும் சதிக் குற்றத்தின் கீழ் வழக்கு தொடுத்திருக்கிறார்.




குஜராத் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திய சிட்டிசன்ஸ் டிரிபியூனலின் முன் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மர்மமான முறையில் கொல்லப்பட்ட குஜராத்தின் முன்னாள் வருவாய்த்துறை இணை அமைச்சர் ஹரேன் பாண்டியா.

சஞ்சீவ் பட்டின் மாமியார் வீட்டில் மர்மத் திருடர்கள் புகுந்து, பணத்தையோ நகையையோ திருடாமல், ஆவணங்களை மட்டும் அள்ளிச் சென்றிருக்கின்றனர். இதுவரை திருடர்கள் பிடிக்கப்படவில்லை. பட் சிறையில் இருக்கும்போது அவருடைய வீடு சோதனையிடப்பட்டது. அவருடைய லாக்கரை உடைக்கவும் மோடி அரசு முயன்றிருக்கிறது. சஞ்சீவ் பட் பிணையில் வந்த சில நாட்களிலேயே, அவருடைய உறவினர் சிரெனிக் பாய் ஷா என்பவரை மர்ம நபர்கள் கடத்திச் சென்று தாக்கியிருக்கின்றனர். மோடிக்கு எதிரான வாக்குமூலத்தில் கார் ஓட்டுனர் பந்த் கையெழுத்திட்டபோது, உடனிருந்த சாட்சி ஷா என்பது குறிப்பிடத்தக்கது. தனக்கெதிரான சாட்சி குழந்தையானாலும், நாய்க்குட்டியானாலும் அனைத்தையும் கொன்றொழிக்கும் வக்கிரத்தில், தெலுங்கு சினிமா வில்லன்களையும் விஞ்சிவிட்டார் நரேந்திர மோடி.

''சஞ்சீவ் பட் கைது செய்யப்பட்டிருப்பது, 2002 முஸ்லிம் இனப்படுகொலை நடவடிக்கையின் கொள்கை ரீதியான தொடர்ச்சி. 2002 இனப்படுகொலை குறித்த திரைமறைவு உண்மைகளை வெளியிட்ட முதல் நேரடி சாட்சி ஹரேன் பாண்டியா. மோடியின் அன்றைய வருவாய்த்துறை இணை அமைச்சரான இவர், 2003-இல் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டார். இப்போது மோடிக்கு எதிரான இரண்டாவது நேரடி சாட்சி சஞ்சீவ் பட்'' என்று கூறியிருக்கிறார் ஓய்வு பெற்ற குஜராத் டி.ஜி.பி. சிறீகுமார்.

குஜராத் இனப்படுகொலையில் மோடி மற்றும் அவரது அரசின் பாத்திரம் குறித்துத் தொடர்ந்து அம்பலப்படுத்திப் போராடி வரும் குஜராத் மாநில முன்னாள் டி.ஜி.பி. சிறீகுமார்.



2002 இனப்படுகொலையின் போது குஜராத்தில் அமைச்சராக இருந்த ஹரேன் பாண்டியாவுக்கு மோடியுடன் முரண்பாடு ஏற்பட்டதன்காரணமாக, குஜராத் படுகொலை குறித்து விசாரணை நடத்திய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சாவந்த் தலைமையிலான சிட்டிசன்ஸ் டிரிபியூனலின் முன் சாட்சியமளித்தார். பிப். 27 உயர் அதிகாரிகள் கூட்டத்தில் மோடி பேசியது என்ன என்பதை வாக்குமூலமாக தெரிவித்தார். இந்த தகவல் மோடிக்கும் கசிந்து விட்டது. இதனைத் தொடர்ந்து மார்ச் 23, 2003 அன்று பாண்டியா படுகொலை செய்யப்பட்டார். பழி முஸ்லீம் தீவிரவாதிகள் மீது போடப்பட்டது. அந்தக் கொலை வழக்கில் அன்று மோடி அரசால் கைது செய்யப்பட்ட அஸ்கார் அலி உள்ளிட்ட 11 பேரும் இப்போது விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

2004-இல் சபர்மதி மத்திய சிறையின் கண்காணிப்பாளராக இருந்த சஞ்சீவ் பட்டிடம் அதே சிறையில் வைக்கப்பட்டிருந்த அஸ்கர் அலியும் மற்ற கைதிகளும் பேசியிருக்கின்றனர். பாண்டியாவைத் தாங்கள் கொல்லவில்லை என்றும் சோரபுதீன் கும்பலைச் சேர்ந்த துளசிராம் பிரஜாபதி என்பவன்தான் சுட்டுக் கொன்றதாகவும் கூறியிக்கின்றனர். உடனே இந்தத் தகவலை அன்றைய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் தெரிவித்திருக்கிறார் சஞ்சீவ் பட். பதற்றமடைந்த ஷா இது பற்றி யாரிடமும் பேசவேண்டாம் என்று பட்டிடம் எச்சரித்திருக்கிறார். பாண்டியா கொலையில் சோரபுதீன் கும்பல் மட்டுமின்றி உயர் போலீசு அதிகாரிகளுக்கும் அரசுத் தலைமையில் உள்ள சிலருக்கும் தொடர்பு இருப்பது தெரியவரவே, அவற்றை அதிகாரபூர்வமான கடிதமாக எழுதி உள்துறை அமைச்சருக்கே அனுப்பியிருக்கிறார் பட். உடனே அங்கிருந்து அவர் தூக்கியடிக்கப்பட்டார்.

பின்னர் 2005-இல் சோரபுதீன் ஷேக்கும் அவர் மனைவி கவுசர் பீவியும் போலி மோதலில் குஜராத் போலீசின் பயங்கரவாத எதிர்ப்புப் படையினரால் கொலை செய்யப்பட்டனர். ''இந்தப் போலி மோதல் கொலையை'' கண்ணால் கண்ட ஒரே சாட்சியான துளசிராம் பிரஜாபதியும் 2006-இல் இன்னொரு போலி மோதலில் கொல்லப்பட்டான்.

பிரஜாபதியைக் கொல்வதற்காகவே, டி.ஐ.ஜி. வன்சாராவை அகமதாபாத்திலிருந்து எல்லைப்புற மாவட்டத்துக்கு மாற்றியிருக்கிறார் மோடி. ''தன்னை குஜராத் போலீசு போலி மோதலில் கொன்றுவிடும் என்று அஞ்சுவதாக'' கொல்லப்படுவதற்கு 14 நாட்கள் முன்னதாக



படிப்பகம்

www.padippakam.com

உதய்பூர் மாவட்ட நீதிபதிக்கும், தேசிய மனித உரிமை ஆணையத்துக்கும் பிரஜாபதியே கடிதம் எழுதியிருக்கிறான்.

தற்போது சோரபுதீன் கொலை வழக்கில் குஜராத் ஐ.பி.எஸ். அதிகாரிகள் வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன் ஆகியோருடன் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சோரபுதீன் கொலைக்கும் அமைச்சர் பாண்டியா கொலைக்கும் தொடர்பு இருப்பதாக சோரபுதீனின் கும்பலைச் சேர்ந்த ஆசம்கான், சென்ற ஆண்டு சி.பி.ஐ. இடம் வாக்குமூலம் தந்திருக்கிறான். இந்தக் கொலைகளின் பின்னணி குறித்த ஆதார பூர்வமான ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக சஞ்சீவ் பட் குஜராத் உயர் நீதிமன்றத்தில் சென்ற மாதம் மனு தாக்கல் செய்தார். அடுத்த மூன்றே நாட்களில் சஞ்சீவ் பட் கைது செய்யப்பட்டார்.

2002 இனப்படுகொலையின் போது கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட காங்கிரசு கட்சியின் முன்னாள் எம்.பி. இஷான் ஜாப்ரி கொலையிலும் மோடிக்குத் தொடர்பிருப்பதாக பட் குற்றம் சாட்டியிருக்கிறார். ஜாப்ரியின் குடியிருப்புப் பகுதியான குல்பர்க் சொசைட்டி, கொலைக் கும்பலால் சுற்றி வளைக்கப்பட்ட போது, அது பற்றி நேரடியாக மோடிக்குத் தகவல் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் சஞ்சீவ் பட் கூறியிருக்கிறார்.




மோடியின் கிரிமினல் குற்றங்களை மட்டுமின்றி, அரசு எந்திரத்தில் ஊடுருவியிருக்கும் பார்ப்பன பாசிஸ்டுகள் இனப்படுகொலைக் குற்றவாளிகளைத் தப்பவைப்பதற்குச் செய்யும் சதிகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறார், சஞ்சீவ் பட்.

குஜராத் போலீசின் விசாரணை மாபெரும் பித்தலாட்டம் என்று அம்பலமானதைத் தொடர்ந்து, முன்னாள் சி.பி.ஐ. இயக்குநர் ராகவன் தலைமையில் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்து மிக முக்கியமான குஜராத் வழக்குகளை விசாரிக்கக் கூறியது, உச்ச நீதிமன்றம். அந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கை கொலைக் குற்றவாளிகளிடம் கள்ளத்தனமாக தரப்பட்டு விட்டது என்று சஞ்சீவ் பட் குற்றம் சாட்டியபோது, ராகவன் அதை மறுத்தார். ஆனால், குஜராத் அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் துஷார் மேத்தாவின் மின் அஞ்சல் முகவரியிலிருந்து சிறப்புப் புலனாய்வுக் குழுவின் வழக்கு விசாரணை குறித்த விவரங்கள் குல்பர்க் சொசைட்டி வழக்கின் கொலையாளிகளுக்கும், சென்னையில் உள்ள ஆர்.எஸ்.எஸ். பிரமுகர் எஸ்.குருமூர்த்திக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. 17.10.2010 தேதியிட்டு இந்து என்.ராமுக்கு குருமூர்த்தி அனுப்பியுள்ள மின் அஞ்சலின்படி, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் ராகவன் உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுத்திருக்கும் 'இரகசிய அறிக்கை'யின் நகலை குருமூர்த்திக்கும் அனுப்பி வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. மோடியைக் குற்றமற்றவர் என்று கூறும் ராகவனின் அறிக்கை குறித்த தனது பாராட்டையும் மேற்கூறிய மின் அஞ்சலில் ராமுக்கு தெரிவித்திருக்கிறார், குருமூர்த்தி. குஜராத் வழக்குகள் தொடர்பாக துக்ளக் சோ, இந்து ராம், குருமூர்த்தி ஆகியோரிடையே ஆலோசனை நடந்துள்ளதாகவும் அந்த மின் அஞ்சலில் குருமூர்த்தி கூறுகிறார். உச்ச நீதிமன்றத்தில் இந்த மின் அஞ்சல்களின் பிரதிகளை ஆவணங்களாக முன்வைத்திருக்கிறார், சஞ்சீவ் பட். (இந்துஸ்தான் டைம்ஸ், 23.10.2011)

கூடுதல் அட்வகேட் ஜெனரலாக இருந்து கொண்டு, குற்றவாளிகளைத் தப்ப வைப்பதற்கு கிரிமினல் வேலை செய்திருக்கும் யோக்கிய சிகாமணியான துஷார் மேத்தா, தன்னுடைய மின் அஞ்சல்களைச் சட்டவிரோதமான முறையில் திருடிவிட்டதாக சஞ்சீவ் பட்டின் மீது அகமதாபாத் சைபர் கிரைமில் வழக்கு பதிவு செய்திருக்கிறார் (தி இந்து, 24.10.2011). மின் அஞ்சல் குறித்து கேள்வி எழுப்பிய இந்துஸ்தான் டைம்ஸ் நிருபரிடம் 'நினைவில்லை' என்று பதிலளித்திருக்கிறார், என்.ராம். ''உனக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை'' என்று பதிலளித்திருக்கிறார், குருமூர்த்தி.

சஞ்சீவ் பட்டைத் தொடர்ந்து மோடி அரசால் பழிவாங்கப்பட்டிருக்கும் இன்னொரு ஐ.பி.எஸ். அதிகாரி ராகுல் சர்மா. 2002 இனப்படுகொலைக்குப் பின்னர் அகமதாபாத் நகரின் கட்டுப்பாட்டு அறையின் இணை ஆணையராக நியமிக்கப்பட்டவர் ராகுல் சர்மா. தனக்கு ஒதுக்கப்பட்ட புலனாய்வுப் பணியின் அங்கமாகப் படுகொலை உச்சத்தில் இருந்த பிப்ரவரி 29 முதல் மார்ச் 3-ஆம் தேதி வரையிலான நாட்களில் அகமதாபாத் நகரின் கைபேசி உரையாடல் விவரங்கள் அனைத்தையும் தனியார் செல்பேசி நிறுவனங்களிடமிருந்து திரட்டி, கமிசனர் பி.சி.பாண்டேயிடம் அந்தக் குறுந்தகடை அவர் ஒப்படைத்திருந்தார். அந்தக் குறுந்தகட்டின் நகல்களை நானாவதி கமிசன், பானர்ஜி கமிசன், சிறப்புப் புலனாய்வுக் குழு ஆகிய அனைவருக்கும் ராகுல் சர்மா கொடுத்து விட்டார். இதன்



படிப்பகம்

www.padippakam.com

விளைவாக, அமைச்சர் மாயா கோத்னானி, விசுவ இந்து பரிசத் செயலர் ஜெய்தீப் படேல் ஆகியோர் கொலை வழக்கில் சிக்க நேர்ந்தது.

இனப்படுகொலை நடந்த பிப். 28-ஆம் தேதியன்று மோடி, ஜெய்தீப் படேலுடன் 5 முறையும், போலீசு கமிசனர் பாண்டேயுடன் 15 முறையும் பேசியிருக்கிறார். காலை 11 மணி முதல் நகரம் எரியத் தொடங்கிவிட்ட போதிலும், கமிசனர் மாலை 7 மணி வரை அலுவலகத்தை விட்டு வெளியே இறங்கவில்லை'' என்று தனது வாக்கு மூலத்தில் கூறியிருக்கிறார் கொலை செய்யப்பட்ட அமைச்சர் பாண்டியா. இந்தத் தொலைபேசி விவரங்களை விசாரணைக் கமிசன்களுக்குக் கொடுத்த ராகுல் சர்மாவின் மீது 'அரசாங்க இரகசியத்தை' அம்பலமாக்கியதாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறது , மோடி அரசு.

இனப்படுகொலையின் மையமாக இருந்த அகமதாபாத் நகரின் அன்றைய கமிசனர் பி.சி.பாண்டே, பின்னர் குஜராத்தின் டி.ஜி.பி.யாக பதவி உயர்வு பெற்றார். மோடியின் கையாளான பாண்டே, சோரபுதீன் போலி மோதல் கொலை வழக்கின் விசாரணையில் தலையிட்டது மட்டுமின்றி, துளசிராம் பிரஜாபதியைக் கொல்வதற்கும் சதித்திட்டம் தீட்டிக் கொடுத்தார் என்று எழுத்துபூர்வமாகவே குற்றம் சாட்டியிருக்கிறார் டி.ஐ.ஜி. ரஜனீஷ் ராய். சோரபுதீன் கொலை வழக்கை விசாரித்து, வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன் ஆகிய ஐ.பி.எஸ். அதிகாரிகளையே கொலை வழக்கில் கைது செய்தவரான ரஜனீஷ் ராயை, பதவி இறக்கம் செய்ய முனைந்திருக்கிறது, மோடி அரசு.

சட்டப்படியும் மனச்சான்றின்படியும் நடக்க முயன்ற எந்தவொரு அதிகாரியையும் மோடி விட்டுவைக்கவில்லை. 2002 இனப்படுகொலையின் போது இந்து மத வெறிக் காலிகளைக் கைது செய்து இனப்படுகொலை நடக்காமல் தடுத்த விவேக் ஸ்ரீவத்ஸவா, ஹிமான்ஷு பட், எம்.டி. ஆன்டனி, பி.சி.தாகூர், குல்தீர் சர்மா போன்ற பல ஐ.பி.எஸ். அதிகாரிகள் வேட்டையாடப்பட்டிருக்கின்றனர். மோடியையும் தொகாடியாவையும் கொலை செய்ய முயன்ற பயங்கரவாதி என்று முத்திரை குத்தி போலீசால் கொல்லப்பட்ட இஷ்ரத் ஜஹான் என்ற பெண்ணின் போலி மோதல் கொலை வழக்கை விசாரித்து வரும் ஐ.பி.எஸ். அதிகாரி சதீஷ் சந்திர வர்மா, ''கொலை செய்யப்பட்ட அந்த அப்பாவிப் பெண்ணைப் பயங்கரவாதி என்று சித்தரித்து வழக்கை மூடுவதற்குத் தனது உயரதிகாரிகள் முயற்சிப்பதாக'' குஜராத் உயர் நீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலமே தாக்கல் செய்திருக்கிறார்.

மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் ஆதாரபூர்வமானவை. இதில் பட்டியலிடப்படாத இன்னும் பல அதிகாரிகள் மோடி அரசால் வேட்டையாடப் பட்டிருக்கின்றனர். மோடி ஒரு இனப்படுகொலைக் குற்றவாளி என்பதைப் புரிந்து கொள்வதற்கு மேற்சொன்ன விவரங்கள் நமக்குத் தேவையில்லை. அந்தக் குற்றவாளியை சட்டப்படி தண்டிக்க முயலும் நேர்மையான அதிகாரிகளுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு நமக்கு இந்த விவரங்கள் தேவை.

ஜெயலலிதாவிடம் எம்.எல்.ஏ. நாற்காலிகளை இரந்து பெற்று, வெட்கமே இல்லாமல் மோடியின் பக்கத்து நாற்காலியில் இளித்துக் கொண்டு அமரும் வலது, இடது போலி கம்யூனிஸ்டுகளைப் போன்ற பதர்களுக்கு மத்தியில், தனது உயிரையும் பணயம் வைத்து நீதிக்காகப் போராடும் சில போலீசு அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள இவ்விவரங்கள் நமக்குத் தேவை.




இனப்படுகொலை குற்றத்திலிருந்து மோடியைத் தப்பவைப்பதற்காகப் பல்வேறு கிரிமினல்தனங்களில் ஈடுபட்டு வரும் தமிழகப் பார்ப்பனக் கும்பலைச் சேர்ந்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் ராகவன், துக்ளக் ஆசிரியர் சோ ராமஸ்வாமி மற்றும் ஆடிட்டரும் சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் இணை அமைப்பாளருமான எஸ்.குருமூர்த்தி.

சட்டத்தின் ஆட்சி, நேர்மை, நடுநிலை என்று ஊர் நாயம் பேசும் சோ, குருமூர்த்தி போன்ற பார்ப்பன பாசிஸ்டுகள், எல்லா விதமான கிரிமினல் வேலைகளிலும் ஈடுபடத் தயங்காதவர்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் இவ்விவரங்கள் தேவை. அரசு அதிகாரத்தை பார்ப்பன பாசிஸ்டுகள் கைப்பற்றினால், மேலிருந்து கீழ் வரை அதனை எப்படி கிரிமினல் மயமாக்குவார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கும் இவ்விவரங்கள் நமக்குத் தேவை.

இவ்வளவு நயவஞ்சகனான மோடி என்ற கொலைகாரனை அன்புச் சகோதரராகப் போற்றும் ஜெயலலிதாவும், இந்த மோசடிப் பேர்வழியின் நிர்வாகத் திறமையைக் கொண்டாடும் ஊடகங்களும், பிரதமராக்க விரும்பும் ஆளும் வர்க்கமும் எப்பேர்ப்பட்ட கிரிமினல்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் கூட இந்த விவரங்களெல்லாம் நமக்குத் தேவைதானே!

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

## மாருதி சுசுகி:

# முதலாளித்துவ பயங்கரவாதத்திற்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் போர்!

**வர்க்க ஒற்றுமை, போர்க்குணம், தியாகம் மூலம் முதலாளித்துவ பயங்கரவாதத்தைத் தொழிலாளி வர்க்கம் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையை சுசுகி தொழிலாளர் போராட்டம் விதைத்துள்ளது.**

அரியானா மாநிலம் - குர்கான் நகருக்கு அருகேயுள்ள மானேசர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள மாருதி கார் தொழிற்சாலையில், அதன் நிர்வாகம் கடந்த அக்டோபர் 7 அன்று திணித்த சட்டவிரோத கதவடைப்பு, தொழிலாளர்களின் 14 நாள் போராட்டத்தின் பின் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. மாருதி நிர்வாகத்தின் இச்சட்டவிரோத கடையடைப்புப் போராட்டத்தை எதிர்த்து, அவ்வாலையின் நிரந்தரத் தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் மட்டுமின்றி, மாருதியின் டீசல் கார்களுக்கான இஞ்சின்களைத் தயாரித்து வழங்கும் பவர்டிரெய்ன் ஆலைத் தொழிலாளர்களும் மற்றும் மாருதி காஸ்டிங் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களும் இணைந்து போராடி, குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் ஈட்டியுள்ளனர்.

மானேசர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள மாருதி சுசுகி நிறுவனத்தின் இரண்டாவது பிரிவு கார் தொழிற்சாலையில் பணியாற்றும் 2,500 தொழிலாளர்களுள், 1,450 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆவர். இந்த ஆலையில் ஒரு ஷிப்டில் ஏறத்தாழ 600 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் பொருள், தொழிலாளர்கள் தமது எட்டு மணி நேர ஷிப்டில், ஒரு நிமிடம்கூட ஓய்ந்து நிற்க நேரமின்றி 45 வினாடிக்கு ஒரு காரை உற்பத்தி செய்து தள்ளிக் கொண்டே இருக்க வேண்டும். இப்படிக் கசக்கிப் பிழியப்படும் நிரந்தரத் தொழிலாளிக்கு, அவரது தகுதிக்கு ஏற்ப ரூ.6,000 முதல் ரூ.18,000 வரை மாத ஊதியம் கிடைக்கும். இதே வேலைக்கு ஒப்பந்தத் தொழிலாளி பெறும் மாத ஊதியமோ வெறும் ரூ.3,000 தான்.

தொழிலாளர்கள் ஒருநாள் விடுப்பெடுத்தால் ஊக்கத் தொகையில் ரூ.1,500/- ம், இரண்டு நாட்கள் விடுப்பு எடுத்தால் ஊக்கத்தொகை முழுவதும் வெட்டப்படும். மதிய உணவுக்கென ஒதுக்கப்படும் 30 நிமிடங்களுக்குள் 400 மீட்டர் தொலைவிலுள்ள உணவகத்துக்கு சென்று நீண்ட வரிசையில் நின்று உணவு பெற்று, அவசர அவசரமாக விழுங்கிவிட்டுத் தாமதமின்றி பணிக்குத் திரும்பிடவேண்டும். ஒரு நிமிடத் தாமதத்துக்குக் கூடச் சம்பளம் வெட்டப்படும். ஒவ்வொரு ஷிப்டிலும் இரண்டு முறை கழிவறைக்கும் கேண்டினுக்கும் சென்று திரும்ப ஏழரை நிமிடங்கள் என்ற வீதம் 15 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்படும். அடுத்த ஷிப்டிற்கான ஆள் வராவிட்டால் 16 மணிநேர வேலை கட்டாயமாகப் பார்க்க வேண்டும். இவை போன்ற எண்ணற்ற அநியாய விதிமுறைகளோடு பணியாற்றும் மானேசர் தொழிலாளர்களுக்குத் தங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க நிர்வாகத்தின் எடுபிடி சங்கத்தைப் புறக்கணித்துவிட்டு, தங்களுக்கென கட்சி சார்பற்ற தொழிற்சங்கம் ஒன்றைக் கட்ட கடந்த ஜூனில் முயன்றனர்.

மாருதி நிர்வாகத்தின் சட்டவிரோதக் கதவடைப்பையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துத் தொழிலாளர்கள் அவ்வாலையின் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம்.




தொழிற்சங்க அனுமதிக்கான விண்ணப்பங்களை அம்மாநிலத் தலைநகரான சண்டிகரில் கொடுக்கச் சென்றிருந்த தொழிற்சங்க முன்னோடிகள் 11 பேரை பழிவாங்கும் நோக்கில் நிர்வாகம் வேலை நீக்கம் செய்தது. இதனைக் கண்டித்து ஜூன், ஜூலை மாதங்களில் முதற்கட்டமாக மானேசர் மாருதி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 13 நாட்கள் உறுதியாக நடந்த இந்தப் போராட்டத்தின் முடிவில், அரியானா மாநில அரசு, மாருதி நிர்வாகம்,



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்கள் ஆகிய முத்தரப்புக்கும் இடையே நடந்த பேச்சுவாரத்தையின் அடிப் படையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் வேலையில் சேர அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த 11 வருடங்களாக நடத்தாமலிருந்த, மாருதி நிர்வாகத்தின் எடு பிடி சங்கமான 'மாருதி உத்யோக் தொழிலாளர் சங்கத்தின்' தேர்தலைத் திடீரென நிர்வாகம் நடத்தியது. மானேசர் மாருதி ஆலைத் தொழி லாளர்கள் இந்தத் தேர்தலை மொத்தமாகப் புறக்கணித்தனர். வெறும் 8 ஓட்டுகள் மட்டுமே அந்தத் தேர்தலில் பதிவாகியது.



மாருதி நிர்வாகம் ஆலையைச் சுற்றிக் கோட்டைச் சுவர் போல நிறுவியிருந்த அலுமினியத் தடுப்புகள்: சட்டவிரோதக் கதவடைப்பின் சாட்சியம்.

இதற்கிடையில் ஜூலை 26-ஆம் நாள், மாருதி தொழிலாளர்கள் விண்ணப்பித்திருந்த புதிய தொழிற்சங்கமான 'மாருதி சுசுகி பணியாளர் சங் கத்தை' அம்மாநில அரசு பதிவு செய்ய மறுத்தது. அதன் பின் மாருதி நிர்வாகம் தனது அடக்குமுறையைத் தீவிரப் படுத்தத் தொடங்கியது. ஜுலை 28-இல் 4 தொழிலாளர்கள் எந்தக் காரணமும் கூறப்படாமல் நிர்வாகத்தால் பணி யிடைநீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்துத் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலைநிறுத்தம் (டூல் டவுன்) செய்தனர். நிர்வாகமோ பழிவாங்கும் போக்கை மென் மேலும் தொடர்ந்தது. ஆகஸ்டு 23 தொடங்கி ஆகஸ்டு 30-க்குள்ளாக 57 தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர். அவர்களில் 26 பேர் நிரந்தரமாக வேலையிலிருந்து நீக்கப் பட்டனர்; 31 பேர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இவற்றுக்கெல்லாம் உச்சமாக ஆகஸ்டு 29-ஆம் தேதி ஆலைக்குள் நுழைய வேண்டுமானால், தொழிலாளர்கள் அனைவரும் 'நன்னடத்தைப் பத்திரம்' ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என நிர்வாகம் உத்தரவிட்டது. தொழிற்சாலையைச் சுற்றிலும் 500 மீட்டர் நீளத்திற்கு அலு மினியத் தகடுகளால் கோட்டைச் சுவரைப் போலத் தடுப்பு உருவாக்கியும், ஆலையின் வாயில்களை கன்டெ யினர் லாரிகளைக் கொண்டு அடைத்தும் யாரும் உள்ளே போகவோ வெளியேறவோ முடியாமல் தடுத்தது. இந்த நன்னடத்தைப் பத்திரத்தில் கையெழுத்திட மறுத்த தொழி லாளர்களோ அலுமினியச் சுவருக்கு வெளியே புதர்களின் நடுவே குமுமி போராடத் தொடங்கினர்.

நன்னடத்தைப் பத்திரம் என்ற பெயரில் ஒரு கொத் தடிமைத்தனப் பத்திரத்தைத்தான் தொழிலாளர்கள் மீது திணிக்க முயற்சி செய்தது, மாருதி நிர்வாகம். நிர்வாகத் தின் அடக்குமுறைகளுக்கு எதிராகத் தொழிலாளர்கள் சங்கமாக அணிதிரளுவதையும், போராடுவதையும் தடுப் பதுதான் 'இந்நன்னடத்தையின்' நோக்கமாகும். குறிப் பாக, இப்பத்திரத்தின்படி தொழிலாளர்கள் செய்யும் 8 சிறிய தவறுகளுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அவர் களை 15 நாட்களுக்குச் சம்பளம் இன்றி பணியிடை நீக்கம் செய்யவும்; 103 பெரிய தவறுகளுக்கு எவ்வித முன்னறி விப்பும் இன்றி அவர்களை வேலையிலிருந்து நீக்கவும் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு என அறிவிக்கப்பட்டது. தவறான காரணங்களைச் சொல்லி விடுமுறை எடுத்தல், கழிப்பறை செல்வதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளுதல், புகையிலை போடுதல், சுத்தமாக இல்லாமல் இருத்தல் - போன்றவையெல்லாம் பெரிய தவறான நடத்தைகளாக இப்பத்திரத்தில் வகைப்படுத்தப் பட்டிருந்தன. மைய அரசின் தொழிலாளர் நலத் துறையின் முன்னாள் செயலாளர் இந்த நன்னடத்தைப் பத்திரத்தைச் சட்ட விரோதமானது எனச் சுட்டிக் காட்டிய பின்னரும், மைய அரசு மாருதி சுசுகி நிர்வாகத்துக்கு எதிராக சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை; அரியானா மாநில அரசோ மாருதி நிர்வாகத்திற்கு வெளிப் படையாகவே ஜால்ரா தட்டியது.

இக்கொத்தடிமைப் பத்திரத்தில் கையெழுத்திட மறுத்து அனைத்துத் தொழிலாளர்களும் ஆகஸ்டு 29 முதல் செப்டம்பர் 30 முடிய ஏறத்தாழ 33 நாட்கள் தொடர்ந்து போராடினார்கள். அதன் பிறகு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும் பினார்கள். ஆனால், வேலைக்குத் தொழிலாளர்கள் திரும்பியதும், மறுநாளே தொழிலாளர் மீதான அடக்கு முறையை நிர்வாகம் தொடங்கியது. இச்சமயத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிரந்தரத் தொழிலாளர்களும் போராட்டத்தில் இறங்கினர். இந்த இருதரப்பினரின் ஒற்றுமையைச் சிதைத்திடத் திட்ட மிட்ட நிர்வாகம், 1200 ஒப்பந்தத் தொழிலாளர்களை அக் டோபர் முதல் நாளன்று வேலையை விட்டு நீக்கியது. அத்துடன், நிரந்தரத் தொழிலாளர்கள் அனைவரையும் அவர்கள் வேலைபார்த்த யூனிட்டுகளிலிருந்து வேறு யூனிட்டுகளுக்கு மாற்றிப்போட்டது. ஏற்கெனவே போதிய அளவிற்கு இயக்கப்படாமலிருந்த பேருந்து வசதியை, நிர்வாகம் முற்றாக நிறுத்தியது.

நன்னடத்தைப் பத்திரத்தில் கையெழுத்திடாத தொழி லாளர்களை ஆலைக்குள் அனுமதிக்க மறுத்தது, ஒப் பந்தத் தொழிலாளர்களை அதிரடியாகப் பணிநீக்கம் செய்தது ஆகிய நடவடிக்கைகளின் மூலம் மாருதி நிர் வாகம் மறைமுகமான வழியில் ஒரு சட்டவிரோதமான கதவடைப்பைச் செய்துவிட்டு, தனது எடுபிடி முதலாளித் துவப் பத்திரிக்கைகளின் மூலம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துவிட்டதாகவும், உற்பத்தி



படிப்பகம்

www.padippakam.com



குர்கானிலுள்ள பன்னாட்டு நிறுவனமான ரிக்கோ தொழிற்சாலையில் தொழிற்சங்க உரிமைகளைக் கோரி நடந்த வேலைநிறுத்தத்தின்பொழுது அவ்வாலைத் தொழிலாளர்கள் நடத்திய மறியல் போராட்டம் (இடது); தொழிற்சங்க உரிமைகள் கோரிப் போராடிய ஹோண்டா மோட்டார் சைக்கிள் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல். (கோப்புப் படங்கள்)

யைச்சீர்குலைப்பதாகவும் புளுகுணிப் பிரச்சாரத்தை நடத்தியது. இன்னொருபுறம் அரியானா மாநில அரசு வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது என்ற போர்வையில் போலீசு, நீதிமன்றம் மூலம் தொழிலாளர்களை மிரட்டி மாருதிக்கு ஆதரவாக நடந்து கொண்டது.

மாருதி நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு எதிராகக் கடந்த ஜூன் மாதம் தொடங்கி பல்வேறு வழிகளில் நடந்து வரும் போராட்டத்தை குர்கானைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் ஆதரித்து வந்த நிலையில், தற்பொழுது சுசுகி பவர்டிரைய்ன் ஆலைத் தொழிலாளர்களும், சுசுகி காஸ்டிங்ஸ் மற்றும் சுசுகி மோட்டார் சைக்கிள்ஸ் தொழிலாளர்களும் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் இறங்கினர். தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம்; பரவுவதைத் தடுத்துவிடலாம் எனக் கனவு கண்டு கொண்டிருந்த மாருதி சுசுகி நிர்வாகத்திற்கு தொழிலாளர்களின் வர்க்க ஒற்றுமை இடியாக இறங்கியது. இப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்துக் கொண்டே போனால், குர்கான் முழுவதுமே தொழிலாளர்களின் போராட்டம் பரவிவிடும் என அஞ்சிய அரசும், மாருதி நிர்வாகமும் தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டனர்.

இப்பேச்சுவார்த்தையின்படி, 1,200 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும், ஷிப்டுக்குத் தொழிலாளர்களை அழைத்து வரும் பேருந்து வசதியினை மீண்டும் முறையாக நடத்தவும், பணியிடை நீக்கம்/வேலை நீக்கம் செய்யப்பட்ட 94 தொழிலாளர்களில் 64 பேரை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளவும் நிர்வாகம் சம்மதம் தெரிவித்தது. தொழிலாளர்களின் புதிய சங்கத்தை அங்கீகரிக்க நிர்வாகம் மறுத்துவிட்டபோதும், நிர்வாகத்தின் எடுபிடி சங்கத்தில் தொழிலாளர்கள் சேர வேண்டும் என நிர்பந்திப்பதைக் கைவிடவும். தொழிலாளர் நல சங்கம் ஒன்றை நிர்வாகமும் தொழிலாளர் பிரதிநிதிகளும் இணைந்து ஏற்படுத்தவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளது.

மாருதி ஆலைத் தொழிலாளர்களின் போராட்டத்தை எவ்விதச் சலுகையும் கொடுக்காமல் ஒடுக்கிவிடுவதன் மூலம், குர்கான் பகுதியில் இனி எந்தவொரு தொழிலாளர் போராட்டமும் தலையெடுக்கவிடாமல் செய்துவிட வேண்டும் என முதலாளித்துவ வர்க்கம் எண்ணிக் கொண்டிருந்தது. மாருதி ஆலைத் தொழிலாளர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேறாவிட்டாலும், முதலாளிகளின் அந்த எண்ணத்தில் மண் விழுந்திருப்பது இந்தப் போராட்டத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். மேலும், இப்போராட்டம் நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மத்தியில் மட்டுமின்றி, தனித்தனி தொழிலகங்களையும் தாண்டி குர்கானைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்கி வருகிறது.

இப்போராட்டத் தலைமை பிழைப்புவாதத் தொழிற்சங்கங்களை அண்டாமல், போர்க்குணத்தோடும், தியாக உணர்வோடும் இப்போராட்டத்தை உறுதியாக நடத்தியிருந்தாலும், தொழிலாளர்களின் மீதான இந்தக் கொடிய அடக்குமுறையானது நாடு மறுகாலனியாவதன் வெளிப்பாடு என்பதை உணர்ந்து கொள்வதும், அதற்கேற்ப புரட்சிகரத் தொழிற்சங்கங்களில் அணிதிரளுவதும் காலத்தின் கட்டாயமாகும்.

2005-இல் ஹோண்டாவில், 2009-இல் ரிக்கோவில், 2011-இல் மாருதியில் என அடுத்தடுத்து குர்கானில் நடந்து வரும் போராட்டங்களினால், மாருதி நிர்வாகம் ஏற்றுமதிக்கான தனது புதிய கார் ஆலையை குஜராத்தில் தொடங்கப்போவதாக அறிவித்திருக்கிறது. குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தமக்குத் தேவைப்படும் மானியங்களையும், வரிச்சலுகைகளையும் வாரி வழங்குவார் என்பதோடு, தொழிலாளர் போராட்டங்கள் எதுவும் முளைத்துவிடாமலும் கவனித்துக்கொள்வார் என்ற நம்பிக்கைதான் மாருதி நிர்வாகத்தை அரியானாவை விட்டு குஜராத்தை நோக்கி ஓடச் செய்திருக்கிறது. இந்த வகையில் குர்கான் மறுகாலனியத் தாக்குதலை எதிர்கொண்டுவரும் இந்தியத் தொழிலாளி வர்க்கத்திற்கு நம்பிக்கை ஊட்டும் சின்னமாகவும், மோடியின் குஜராத் எதிர்ப்புரட்சியின் மையமாகவும் விளங்குகிறது என்று கூறலாம்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமை வேடதாரி மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி டிபேன் கும்பலின் ரவுடித்தனம்!

கடந்த 1.10.2011 அன்று மாலை 6 மணி முதல் 2.10.2011 காலை 6 மணி வரை மதுரை அரசரடியில் தமிழ்நாடு இறையியல் கல்லூரி வளாகத்தில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி ஹென்றி டிபேனின் மக்கள் கண்காணிப்பகத்தின் ஒருங்கிணைப்பில், மரண தண்டனைக்கு எதிரான கூட்டமைப்பின் சார்பில் ''தூங்கா நகரில் தூங்கா நிலை போராட்டம்'' என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மதுரை உயர் நீதிமன்றத்தில் துண்டறிக்கை விநியோகித்து நன்கொடையும் திரட்டியவர், வழக்குரைஞர் வல்லரசு.

மக்கள் கண்காணிப்பகத்தில் ஏற்கெனவே பணியாற்றிய வல்லரசு, பின்னர் அதிலிருந்து விலகி விட்டார். கடந்த செப்டம்பர் மாதத்தில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்குப் பார்வையாளராகச் சென்றிருந்த வல்லரசுவிடம் ஹென்றி டிபேனின் மருமகனாகிய பிரதீப் சாலமோன் ஆர்ப்பாட்ட பேனரைப் பிடித்து நிற்குமாறு கூற, அதற்கு வல்லரசு, நான் மக்கள் கண்காணிப்பக ஊழியர் அல்ல என்று கூறி மறுத்திருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த பிரதீப் சாலமோன், அவரை ஆபாசமாகத் திட்டியுள்ளார்.



மனித உரிமை வேடதாரி
ஹென்றி திபேன் கும்பலால்
தாக்கப்பட்ட வழக்குரைஞர் வல்லரசு.

இந்நிலையில், மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற தூங்காநிலை போராட்டத்தைக் காணச் சென்றிருந்த வல்லரசு, தனது இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டுத் திரும்பி வரும்போது அது கீழே விழுந்து சேதமடைந்திருந்தது. அருகிலிருந்த பிரபு சாலமோன்தான் அதைக் கீழே தள்ளி சேதப்படுத்தியிருக்கிறார் என்பதால், அவரிடம் விளக்கம் கேட்டபோது, வல்லரசுவைத் தகாத வார்த்தைகளால் ஏசியிருக்கிறார், பிரபு சாலமோன். பின்னர் இது பற்றி ஹென்றி டிபேனிடம் வல்லரசு முறையிட்டபோது, அவர் வெறி பிடித்தவர் போல வல்லரசுவைத் தாக்கியதோடு, ஆபாச வார்த்தைகளால் ஏசியுள்ளார். வல்லரசுவை அவர் வெளியே இழுத்து வந்த போது பிரதீப் சாலமோனும் அவரது விசுவாசிகளும் சேர்ந்து கொண்டு மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர். பிரதீப் சாலமோனின் மனைவி அனிதா, ஹென்றியின் மனைவி சிந்தியா ஆகியோர் வல்லரசு மீது செருப்பை வீசியுள்ளனர். பலர் முன்பாக நடந்த இக்கொடுமையைப் பற்றி போலீசில் புகார் கொடுத்துவிட்டு, மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வல்லரசு உள் நோயாளியாக ஒரு வார காலம் இருந்து சிகிச்சை பெற்றார்.

வல்லரசுவிடம் 4.10.2011 அன்று விசாரணை நடத்த வந்த போலீசு உதவி ஆணையர் கணேசன், ''ஹென்றி டிபேனிடம் வீண்தகராறு செய்ய வேண்டாம், மருத்துவமனையிலிருந்து சென்றுவிடுங்கள்'' என்று எப்படியாவது அவரை மருத்துவமனையிலிருந்து வெளியேற்ற நிர்பந்தித்துள்ளார். 4.10.2011 அன்று மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் பிணை கோரி ஹென்றியும் அவரது குடும்பத்தாரும் மனுத் தாக்கல் செய்திருந்தனர். பாதிக்கப்பட்ட வழக்குரைஞர் வல்லரசு சார்பாக வாதாடிய மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் வாஞ்சிநாதன், புகார்தாரர் சிகிச்சையில் இருப்பதால், இவ்வழக்கில் பிணை வழங்கக் கூடாது என்றார். ஆனால், அரசுதரப்பு வழக்குரைஞரோ, வல்லரசு மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார் என்று கூற, இந்தப் பச்சைப் பொய்யை ஏற்று நீதிபதி பிணை வழங்கியுள்ளார். இப்படி போலீசுடனும் நீதித்துறையுடனும் கூட்டுச் சேர்ந்துள்ள ஹென்றி டிபேன், போலீசு சித்திரவதை மற்றும் நீதித்துறை ஊழலை எதிர்த்துப் போராடி வருவதாக நாடகமாடுகிறார்.

மதுரையில் ஹென்றி டிபேன் என்பவரைச் செயல் இயக்குநராகக் கொண்டு செயல்பட்டுவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனம்தான், மக்கள் கண்காணிப்பகம். இது ஒரு ஏகாதிபத்திய கைக்கூலி அமைப்பு. ஏகாதிபத்தியங்களிடமே காசு வாங்கிக் கொண்டு மனித உரிமை பற்றி வாய் கிழியப் பேசும் துரோகத்தின் உருவம்தான் ஹென்றி டிபேன். மக்கள் கண்காணிப்பகத்தில் நிலவும் ஹென்றி டிபேனின் குடும்ப ஆதிக்கமும், ஊழியர்களை உரிமைகளற்ற அடிமைகளாக நடத்தும் திமிர்த்தனமும் ஏற்கெனவே அம்பலப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த அமைப்புக்கு முற்போக்குச் சாயம் பூசி மக்கள் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக்கட்சிகளின் அயோக்கியத்தனத்தனத்தை எதிர்ப்பதே மனித உரிமை ஆர்வலர்களின் இன்றைய முக்கிய கடமையாகியுள்ளது.

தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம், மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

# “பொறுக்கித் தின்னப் போட்டிபோடும் உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிப்போம்!”

## – புரட்சிகர அமைப்புகளின் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம்

‘‘பொறுக்கித் தின்னப் போட்டிபோடும் உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிப்போம்! உள்ளாட்சித் தேர்தலின் நோக்கம் அதிகாரத்தைப் பரவலாக்குவதல்ல! ஊழலைப் பரவலாக்குவதே! கிராம மக்களுக்கு உண்மையான அதிகாரம் என்பது உழுபவருக்கு நிலம் வேண்டும்; விளைவித்த பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் வேண்டும்; தேர்ந்தெடுக்கவும் திருப்பி அழைக்கவும் மக்களுக்கு அதிகாரம் வேண்டும். இந்த உரிமைகளை மக்களுக்கு அளிக்காத இப்போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்களே நேரடியாக அதிகாரம் செலுத்தக்கூடிய மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைக்கப் போராடுவோம்!’’ என்ற முழக்கத்துடன் உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரித் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் வீச்சான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.

‘‘எலும்புச் சின்னத்தில் போட்டி போடும் உங்கள் அன்புத் தம்பி பைரவன் வருகிறார், இவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவர், சொத்து சேர்க்கத் தெரியாதவர், எட்டி உதைத்தாலும் நன்றி விசுவாசமிக்கவர், நிற்க நேரமில்லாமல் ஊரெங்கும் சுற்றி வருபவர்’’ என்ற அறிவிப்போடு, இப்படிப்பட்ட உயர்ந்த வேட்பாளரான திருவாளர் நாய்க்கு வாக்கு சேகரிக்கும் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார இயக்கத்தை 13.10.2011 அன்று சென்னை - நொளம்பூர் பகுதியில் இப்புரட்சிகர அமைப்புகள் மேற்கொண்டன. ‘‘நிலம் வேண்டும்; தண்ணீர் வேண்டும்; சாலை வேண்டும்; வேலை வேண்டும். அதைப் பெற்றுத் தராத உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிப்போம்!’’ என்ற முழக்கத்துடன் பட்டாசுகள் அதிர, பறையொலி முழங்க, பொன்னாடை போர்த்திய நாய் ஊர்வலமாக வர, ஆரவாரமாக நடந்த இந்த -தனப் பிரச்சாரம் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. உழைக்கும் மக்கள் கெக்கலி கொட்டி மகிழ்ச்சியுடன் திரண்டு வந்து, தாமாகவே வேட்பாளர் பைரவனுக்கு ஆரத்தி எடுத்தும் தேங்காயில் கற்பூரம் கொளுத்திச் சுற்றியும் உற்சாகத்துடன் இப்பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்தனர்.

14.10.2011 அன்று சென்னை - டாக்டர் சந்தோஷ் நகரில் வேட்பாளர் பைரவனுடன் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்தபோது, எந்த ஓட்டுக்கட்சி வேட்பாளருக்கும் திரளாத அளவுக்கு மக்கள் ஆரவாரத்துடன் திரண்டனர். அப்போது ஓட்டுக் கேட்க வந்த அ.தி.மு.க.வின் வட சென்னை மாவட்டச் செயலாளரான பாலகங்கா, இக்கூட்டத்தைப் பார்த்து பிரச்சாரம் செய்ய முடியாமல் திரும்பிச் சென்றார். சென்னை-குரோம்பேட்டையில் வேட்பாளர்கள் எதிரில் வரும்போது, ‘‘யோக்கியன் வர்றான் பாரு, சொம்பை எடுத்து உள்ளே வை!’’ என்று முழக்கமிட்டபடியே தோழர்கள் பிரச்சாரம் செய்த போது, ஓட்டுக்கட்சி வேட்பாளர்கள் கூனிக்குறுகி முகத்தைத் திருப்பிக் கொண்டு ஒதுங்கிச் சென்றனர்.


சென்னையில்...

ஓசூரில் 14.10.2011 அன்று மாலை மூக்கண்டப்பள்ளி பேருந்து நிலையம் முன்பும், 15-ஆம் தேதியன்று தர்கா பேருந்து நிலையம் முன்பாகவும் பெருந்திரளான உழைக்கும் மக்களின் ஆதரவோடு இப்புரட்சிகர அமைப்புகள் தெருமுனைக் கூட்டங்களை நடத்தின. இவ்விரு



படிப்பகம்

www.padippakam.com

நாட்களிலும் ஆலைவாயில்களிலும் பொதுமக்கள் திரளும் இடங்களிலும் ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்யப்பட்டது.

13.10.2011 அன்று திருச்சியில் தேர்தல் புறக்கணிப்புச் சுவரொட்டி ஒட்டிய தோழர்களிடமிருந்து அவற்றைப் பிடுங்கி, போலீசார் வீடியோ எடுத்துப் பீதியூட்டினர். 14-ஆம் தேதியன்று திருச்சியில் ஆண்டாள் வீதி, சத்திரம் பேருந்து நிலையப் பகுதியில் இப்புரட்சிகர அமைப்புகள் தெருமுனைக் கூட்டங்களை நடத்தின. 14-ஆம் தேதியன்று காலை 8 மணியிலிருந்து துவாக்குடி மலை அய்யம்பட்டி சாலையில் தெருமுனைக் கூட்டமும், அதைத் தொடர்ந்து வீடு வீடாகப் பிரச்சாரமும் நடந்தன. இதைத் தடுத்து நிறுத்த முடியாத ஆத்திரத்தில் போலீசார் ஒரு தோழரின் வீட்டில் புகுந்து துணிமணிகளை அள்ளி வெளியே வீசிப் பயபீதியூட்ட முயற்சித்தனர். தேர்தல் புறக்கணிப்புத் துண்டுப் பிரசுரம் விநியோகித்தது இளம் தோழர்கள்தான் என்று தெரிந்து, அவர்களை போலீசு தேடியது. அவர்களோ அருகிலிருந்த மதில் சுவர் மீது ஏறி நின்று கொண்டு போலீசுக்கு பெப்பே காட்டினர். 2 தோழர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டிக் கைது செய்த போலீசு, பின்னர் அவர்களைப் பிணையில் விடுவித்தது.

13-ஆம் தேதியன்று திருச்சியில் அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் தரைக்கடை பகுதியில் பிளக்ஸ் தட்டிகள் கட்டித் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்யப்பட்டது. தீபாவளி பண்டிகையையொட்டி மக்கள் திரளாக தரைக்கடைகளுக்கு வந்ததால் இது சிறப்பான பிரச்சாரமாக அமைந்தது.



கடலூரில்...

திருச்சியில் ''புதிய ஜனநாயகம்'' இதழில் வெளிவந்த உள்ளாட்சித் தேர்தல் பற்றிய கட்டுரையை விளக்கிப் பேருந்தில் பு.மா.இ.மு. தோழர்கள் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்த போது, கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு தாய், நீங்கள் சொல்வதுதான் உண்மை, சாமிக்குப் போடுற காணிக்கையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று தான் சேர்த்து வைத்திருந்த ரூ.500-க்கான சில்லறைக் காசுகளை தோழர்களின் உண்டியலில் போட்டு இப்பிரச்சார இயக்கத்தை ஆதரித்தார். இதைக் கண்டு பேருந்திலிருந்த பலரும் ரூ.50, 100 என நன்கொடைகளை அள்ளிக் கொடுத்துத் தோழர்களை உற்சாகப்படுத்தி ஆதரித்தனர்.

கடலூரில் மஞ்சக்குப்பம் பகுதியில் 16.10.2011 அன்று பறையொலி முழங்க, செங்கொடி ஏந்தி, செஞ்சட்டையுடன் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு பு.மா.இ.மு., தோழர்கள் வீடுவீடாகத் துண்டுப் பிரசுரம் கொடுத்தும் தெருமுனைக் கூட்டங்களை நடத்தியும் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

தமிழக மக்களைக் குடிகாரர்களாக்கி, இலவசங்களையும் அன்பளிப்புகளையும் வாரியிறைத்து மக்களை ஊழல்மயப்படுத்தும் ஓட்டுக்கட்சிகளை அம்பலப்படுத்தியும், மக்களுக்கு அதிகாரமளிக்காத உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணித்து கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு எதிராக அணிதிரள மக்களை அறைகூவியும் நடந்த இப்பிரச்சார இயக்கம், உழைக்கும் மக்களின் நெஞ்சங்களில் போராட்டத் தீயை மூட்டுவதாக அமைந்தது.




ஓசூரில்...

- பு.ஜ. செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# ஏர் - இந்தியா ஊழலும் ஊடகங்களின் பாராமுகமும்

**மைய அரசு ஏர்-இந்தியாவை நட்டத்திலும் கடனிலும் சிக்கவைத்திருப்பதை ஊடகங்கள் ஊழலாகவும் கிரிமினல் குற்றமாகவும் சித்தரிக்கவில்லை.**

**பொ**துத்துறை நிறுவனமான ஏர்-இந்தியாவின் செயல்பாடுகள் குறித்து மைய அரசின் தணிக்கைத் துறை நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ள அறிக்கை, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அந்நிறுவனத்தைத் திட்டமிட்டு படுபாதாளத்திற்குள் தள்ளிவிட்டுள்ள சதித்தனத்தை அம்பலப்படுத்தியிருக்கிறது. மைய அரசும், ஏர்-இந்தியா நிர்வாகமும் அமெரிக்காவைச் சேர்ந்த விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங்கிற்கும், ஐரோப்பாவைச் சேர்ந்த விமானத் தயாரிப்பு நிறுவனமான ஏர் பஸ் நிறுவனத்திற்கும் மற்றும் விமான சேவைகளை நடத்திவரும் எமிரேட்ஸ், கிங் ஃபிஷர், ஜெட் ஏர்வேஸ் உள்ளிட்ட பல தனியார் நிறுவனங்களுக்கும் சாதகமாக எடுத்த முடிவுகளால், ஏர் - இந்தியா இன்று மீள முடியாத நட்டத்திலும் கடனிலும் சிக்கிக் கொண்டுவிட்டதாகத் தனது அறிக்கையில் குற்றஞ்சுமத்தியிருக்கிறது, தணிக்கைத் துறை.

2004-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை இலாபத்தில் இயங்கிவந்த ஏர்-இந்தியா நிறுவனம், அதன் பின், குறிப்பாக 2004-இல் மன்மோகன் சிங் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்ற பிறகுதான் நட்டமடையத் தொடங்கியது. ஏர்-இந்தியா நிறுவனம் தனது வியாபாரம் படுத்துப்போனதால் நட்டமடையவில்லை. மாறாக, ஏர்-இந்தியா நிறுவனத்திற்குரிய வர்த்தகச் சந்தையைத் தனியார் விமான நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததும்; தேவையேயில்லாத விதத்திலும் ஏர்-இந்தியாவின் வருமானத்துக்கு மீறிய விதத்திலும் புதிய விமானங்களை வாங்கி அந்நிறுவனத்தின் கடன் சுமையை அதிகரித்ததும்தான் ஏர்-இந்தியாவைப் போண்டியாக்கி விட்டது. ஏர்-இந்தியா நிறுவனத்தை சர்வதேச தரத்துக்கு நவீனப்படுத்துவது எனக் கூறிக்கொண்டு, காங்கிரசு கூட்டணி இந்தச் சதித் திட்டத்தை அரங்கேற்றியிருக்கிறது.

ஏர்-இந்தியா நிறுவனத்தைப் போண்டியாக்கிய பெருமைக்குரிய அமைச்சரும் பெரு முதலாளியுமான பிரஃபுல் படேல்.



1990-களில் விமானச்சேவைத் தனியாருக்குத் திறந்துவிடப்பட்ட பின், ஏர்-இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்களை நவீனமயமாக்குவதை மைய அரசு திட்டமிட்டே புறக்கணித்து வந்தது. குறிப்பாக, ஏர்-இந்தியாவிற்குப் புதிதாக 26 விமானங்களை வாங்க வேண்டும் என அந்நிறுவனம் 1996-இல் வைத்த கோரிக்கையை எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் மைய அரசு பரிசீலிக்கத் தொடங்கியது. மைய அரசின் இந்த திடீர் பாசத்தின் பின்னே ஏர்-இந்தியாவின் நலன்களை விட, அதன் அமெரிக்க அடிவருடித்தனம்தான் மறைந்திருந்தது.

2003-ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்க காங்கிரசைச் சேர்ந்த 43 உறுப்பினர்கள் அடங்கிய வர்த்தகக் குழு, ஏர்-இந்தியாவிற்கு விமானங்கள் வாங்குவது தொடர்பாக இந்தியப் பிரதம மந்திரி அலுவலகத்துக்குக் கடிதம் எழுதியது. இக்கடிதத்தை பிரதம மந்திரி அலுவலகம் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்த பின்தான் ஏர்-இந்தியா நிறுவனத்திற்கு 28 விமானங்கள் வாங்குவது தொடர்பான கோப்பு தூசி தட்டி எடுக்கப்பட்டது. இச்சமயத்தில் அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இந்தியப் பிரதம மந்திரி அலுவலகத்துக்கு எழுதிய கடிதத்தில், எத்தனை விமானங்கள் வாங்குகிறீர்களோ, அதற்கு ஏற்றபடி விலையை அனுசரித்துத் தர முடியும் எனத் தூண்டில் போட்டது.

போயிங்கிடமிருந்து இக்கடிதம் கிடைக்கப் பெற்ற அடுத்த சில மாதங்களுக்குப் பின் பதவியேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, 28 விமானங்களுக்குப் பதிலாக 38,149 கோடி ரூபாய் செலவில் 68 விமானங்களை போயிங் நிறுவனத்திடம் வாங்கும் ஆலோசனையை ஆகஸ்ட் 2004-இல் முன்வைத்தது. பிரதமர் மன்மோகன் சிங் ஜூலை 2005-இல் அணு சக்தி ஒப்பந்தம் மற்றும் இராணுவ ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவிற்குச் செல்லவிருந்தார். அவரது இந்தப் பயணத்திற்கு முன்பாக இந்த ஒப்பந்தத்தை முடித்துவிட வேண்டும் என்று இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இந்திய வெளியுறவுத் துறையைக் கேட்டுக் கொண்டதாக விக்கி லீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்தியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

எனினும், விமானங்கள் வாங்குவது குறித்த ஒப்பந்தம் ஜூலை 2005-க்கு முன்பாக முடிவாகவில்லை. 2005-ஆம் ஆண்டின் இறுதியில்தான் கையெழுத்தானது. குறிப்பாக, மன்மோகன் சிங் வெளியுறவு அமைச்சகத்தின் பொறுப்பை நவம்பர் 6, 2005-இல் ஏற்றுக் கொண்ட பின், அடுத்த 54-ஆவது நாளில், அதாவது டிசம்பர் 30, 2005 அன்று இந்த ஒப்பந்தத்தை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகமும், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை கமிட்டியும், பிரதமர் அலுவலகமும் அங்கீகரித்து ஒரே நாளில் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான அடுத்த இரண்டு மாதங்களிலேயே, ஐரோப்பாவைச் சேர்ந்த ஏர் பஸ் நிறுவனத்திடமிருந்து ஏறத்தாழ 8,339 கோடி ரூபாய் செலவில் 43 விமானங்களை இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு வாங்கும் ஒப்பந்தமும் முடிவானது. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் மார்ச் 2006-இல் இந்தியாவிற்கு வரவிருந்ததையொட்டியே, இந்த ஒப்பந்தங்களை முடிவு செய்வதில் இத்துணை வேகம் காட்டப்பட்டது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பதவியேற்ற பின், இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கும் அமெரிக்கா, கனடா மற்றும் அரபு நாடுகளுக்கும் விமானச் சேவைகளை வழங்கும் உரிமங்கள் வெளிநாடுகளைச் சேர்ந்த பல தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்பட்டன. அரபு நாடுகளைச் சேர்ந்த விமான நிறுவனங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஏர்-இந்தியாவின் சந்தையை விழுங்கத் தொடங்கிய அதேசமயம், அரபு நாடுகள் ஏர்-இந்தியா துபாய் வழியாக வட அமெரிக்க நாடுகளுக்குச் செல்லும் உரிமத்தை வழங்காமல் இழுத்தடித்தன. இது மட்டுமின்றி, உள்நாட்டிலும் வருமானமிக்க வழித்தடங்களும், நேரங்களும் கிங் ஃபிஷர், ஜெட் ஏர்வேஸ் ஆகிய தனியார் விமான நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டன. அதாவது, தனியார் பஸ் முதலாளிகளின் இலாபத்திற்காக அரசு போக்குவரத்துக் கழகம் மொட்டையடிக்கப்பட்டதைப் போல, ஏர்-இந்தியாவும் இந்தியன் ஏர்லைன்ஸும் மொட்டையடிக்கப்பட்டன. இதனால் இந்த நிறுவனங்களின் வருமானம் குறைந்து, அவை நட்டத்தில் தள்ளப்பட்ட நேரத்தில்தான், வெளிச் சந்தையில் கடன்வாங்கியாவது ஏறத்தாழ 47,000 கோடி ரூபாய் பெறுமான இந்த 111 விமானங்களையும் வாங்கும் ஒப்பந்தத்தை முடிவு செய்தது, மைய அரசு.



டெல்லி மற்றும் மும்பய் விமான நிலையங்களைத் தனியார்மயமாக்கும் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்ட பேரணியும் (மேல் படம்) சாலை மறியலும் நடத்திய ஏர்-இந்தியா நிறுவன ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள்.

இதற்கு முன்பாக விமானம் வாங்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்பொழுது, தனது நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, வாங்கும் விமானங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளும் விதியை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையை விமான போக்குவரத்து அமைச்சகம் கடைப்பிடித்து வந்தது. ஆனால், இம்முறையோ ஒப்புக் கொள்ளப்பட்ட 111 விமானங்களையும் வாங்கிக் கொள்ளும்படி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. மேலும், விமானங்கள் வாங்கும் ஒப்பந்தம் முடிவான பிறகு ஏர்-இந்தியாவையும் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தையும்

> **மார்ச் 2006-இல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியாவிற்கு வருகை தந்தபொழுது, போயிங்குடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அவருக்கு நினைவுப் பரிசைப் போல வழங்கப்பட்டது. அதேசமயம், இந்த ஒப்பந்தங்களால் ஏர்-இந்தியா நிறுவனம் இன்று 20,000 கோடி ரூபாய் நட்டத்திலும், 46,000 கோடி ரூபாய் கடனிலும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றாக இணைக்கும் முடிவும் அரசால் எடுக்கப்பட்டது. விமானங்கள் வாங்குவதில் ஏற்கெனவே இருந்துவந்த நடைமுறையைப் பின்பற்றியிருந்தால், ஏர்-இந்தியாவையும் இந்தியன் ஏர்லைன்ஸையும் ஒன்றாக இணைத்த பிறகு விமானங்களை வாங்கும் முடிவை எடுத்திருந்தால், நட்டத்தை ஒரு குறிப்பிட்ட அளவாவது குறைத்திருக்க முடியும் எனத் தணிக்கைத் துறை குறிப்பிட்டுள்ளது.

111 விமானங்களை வாங்கும் முடிவு, ஏர்-இந்தியாவையும் இந்தியன் ஏர்லைன்ஸையும் இணைப்பது என்ற முடிவு - இவையிரண்டும் இப்பொதுத்துறை நிறுவனங்களை ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்ற தீய நோக்கத்துடன்தான் எடுக்கப்பட்டுள்ளன. மார்ச் 2006-இல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியாவிற்கு வருகை தந்தபொழுது, போயிங் குடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அவருக்கு நினைவுப் பரிசைப் போல வழங்கப்பட்டது. அதேசமயம், இந்த ஒப்பந்தங்களாலும், இணைப்பாலும் ஏர்-இந்தியா நிறுவனம் இன்று 20,000 கோடி ரூபாய் நட்டத்திலும், 46,000 கோடி ரூபாய் கடனிலும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.



கே.ஜி. எண்ணெய் வயல் ஏலத்தில் நடந்துள்ள முறைகேடுகளால் பெரும் இலாபம் அடைந்துவரும் முகேஷ் அம்பானி (இடது) மற்றும் அவரது நிறுவனத்திற்குச் சாதகமாக நடந்துகொண்ட பெட்ரோலியத் துறையின் முன்னாள் அமைச்சர் முரளி தியோரா.

2-ஜி அலைக்கற்றை விவகாரத்தோடு இதனை ஒப்பிட்டால், ஏர்-இந்தியா நிறுவனத்தைத் திட்டம் போட்டு நட்டத்தில் சிக்க வைத்த பிரதமர் மன்மோகன் சிங், சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரஃபுல் படேல் தொடங்கி அதிகாரிகள் ஈறாக இந்த நம்பிக்கை துரோகத்தோடு தொடர்புடைய அனைவர் மீதும் விசாரணை நடத்தி வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால், எதிர்க்கட்சிகளும், கார்ப்பரேட் பத்திரிகைகளும் இந்தச் சதித்தனம் பற்றி வாய்திறக்க மறுக்கின்றன. அதே பொழுதில், இந்த நட்டத்தைக் காட்டி, இந்நிறுவனத்தைத் தனியார்மயப்படுத்திவிட வேண்டும் என்ற பிரச்சாரத்தை தான் மும்மரமாக நடத்தி வருகின்றன.

2-ஜி விவகாரத்தில் தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவைக் குறிவைத்துத் தாக்கிய பத்திரிகைகள், ஏர்-இந்தியாவை நட்டத்திற்குள் தள்ளிவிட்ட சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரஃபுல் படேலைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு, அவரே ஒரு பெரும் முதலாளி, பொருளாதாரப் பத்திரிகைகளுக்கு நெருக்கமான அன்பர் என்பதுதான் காரணம். 2-ஜி அலைக்கற்றை ஏலவிற்பனையில் நடந்த ஊழலை விட, மிகப் பிரம்மாண்டமான அளவில் ஊழல் நடந்துள்ள கே.ஜி. எண்ணெய் வயல் ஊழலில் (பார்க்க: பு.ஜ; ஜூலை 2011) தொடர்புடைய முகேஷ் அம்பானியையும், பெட்ரோலியத் துறையின் முன்னாள் அமைச்சர் முரளி தியோராவையும் பத்திரிகைகள் மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளும், சி.பி.ஐ.யும், நீதிமன்றமும் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு அம்பானியின் பணபலமும் அரசியல் செல்வாக்கும் காரணமாகும். அவர்களின் இந்த செல்வாக்கு இவ்வூழல் தொடர்பான தணிக்கைத் துறையின் அறிக்கையை நீர்த்துப் போன வடிவத்தில் நாடாளுமன்றத்தில் அளிக்கும் அளவிற்குப் பாய்ந்திருக்கிறது.

கார்ப்பரேட் பகற்கொள்ளை தொடர்பான ஊழல்களுள் ஒன்றிரண்டு மட்டுமே அரசியல் காரணங்களை முன்னிறுத்தி அம்பலப்படுத்தப்பட்டு, வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன; எஞ்சியவை வெளியே தெரிந்த வேகத்திலேயே அமுக்கப்படுகின்றன என்பதற்கு ஏர்-இந்தியா ஒப்பந்தம், கே.ஜி எண்ணெய் வயல் ஏலம், இஸ்ரோ ஊழல் எனப் பல உதாரணங்கள் நம் கண் முன்பே வலம் வருகின்றன.

● ரஹீம்

> **2-ஜி விவகாரத்தில் தொலைத்தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவைக் குறிவைத்துத் தாக்கிய ஊடகங்கள், ஏர்-இந்தியாவை நட்டத்திற்குள் தள்ளிவிட்ட சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரஃபுல் படேலைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு, அவரே ஒரு பெரும் முதலாளி, பொருளாதாரப் பத்திரிக்கைகளுக்கு நெருக்கமான அன்பர் என்பதுதான் காரணம்.**



படிப்பகம்

www.padippakam.com

# ஈமு கோழி வளர்ப்பு:

# கவர்ச்சிகரமான மோசடி!

**ஈமு கோழியின் இறைச்சி தொடங்கி இறகு வரை அனைத்தையும் விற்று இலாபம் பார்க்கலாம் என்ற விளம்பரத்திற்கு எந்தவிதமான அடிப்படையும் கிடையாது.**

நான்கு ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டம், வெள்ளையனூர் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்ற விவசாயி, தன் குடும்பத் தேவைக்காக இரண்டரை ஏக்கர் நிலத்தில் இரண்டு ஏக்கரை எட்டு லட்ச ரூபாய்க்கு விற்றார். மகள்களின் திருமணச் செலவும் மகனின் படிப்புச் செலவும் போக கையில் சுமார் 2 லட்ச ரூபாய் இருந்தது. இந்தத் தொகையைக் கொண்டு அரை ஏக்கர் நிலத்தில் ஏதேனும் தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இருந்தார்.

இந்நேரத்தில் பத்திரிக்கைகளில் ஈமு கோழியைப் பற்றிய விளம்பரம் வந்திருந்தது. ஈமு கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்த்து முட்டை உற்பத்தி செய்து கொடுத்தால், முட்டை ஒன்றை 2000 ரூபாய்க்கு வாங்கிக் கொள்கிறோம் என்று அந்த விளம்பரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்தைப் பற்றி அக்கம் பக்கத்தில் விசாரித்து நம்பிக்கை பெற்ற மாணிக்கம், 2 லட்ச ரூபாயை ஈமு கோழி வளர்ப்பில் முதலீடு செய்தார். ஈமு கோழிகளும் வளர்ந்தன. முட்டையும் இட்டன. ஆனால், இப்பொழுது 1000 ரூபாய்க்குக்கூட முட்டை வாங்க ஆளில்லை; வெளியிலும் விற்க முடியவில்லை. ஈமுவுக்குத் தீவனம் போட்டே ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் கடனாளியாகியிருக்கிறார். இன்று இவரைப் போல -ற்றுக்கணக்கான விவசாயிகள் ஈமு கோழிப் பண்ணை அமைத்துக் கடனாளியாகி நிற்கிறார்கள்.

விவசாயத்தில் இடுபொருட்களின் கிடுகிடு விலை உயர்வு, ஆட்கள் பற்றாக் குறை, நிச்சயமற்ற பருவ காலங்கள், விவசாயப் பொருட்களுக்கு சந்தையில் நிச்சயமற்ற விலை, இவற்றால் தொடர் நட்டம் முதலானவற்றின் காரணமாக விவசாயிகள் நொடிந்து போயுள்ளனர். விவசாயம் செய்வது தற்கொலைக்குச் சமம் என்று கருதிப் பலரும் மாற்றுத் தொழிலைத் தேட நிர்பந்திக்கப்படுகின்றனர். இப்படி நடுத்தர - சிறு விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கான வாழ்வாதாரங்கள் பிடுங்கப்பட்ட பின்னணியில், ஈமு பண்ணை முதலாளிகள் இந்தச் சூழலைப் பயன்படுத்தி விவசாயிகளை ஏய்த்துக் கொள்ளையிடக் கிளம்பியுள்ளனர். தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்திலுள்ள பெருந்துறை சுசி பார்ம்ஸ் முதற்கொண்டு இருபதுக்கும் மேற்பட்ட ஈமு நிறுவனங்கள் அதிரடித் திட்டங்களை அறிவித்து விளம்பரம் செய்து வருகின்றன. ''ஒன்றரை முதல் இரண்டு லட்ச ரூபாய் முதலீடு செய்தால், உங்கள் நிலத்தில் எங்கள் நிறுவனத்தின் செலவில் கோழிகளுக்கான கொட்டகை போட்டு அதில் ஆறு குஞ்சுகள் விடப்படும்; அதற்கான தீவனமும் வழங்கப்படும்; ஈமு கோழி வளர்ப்புக்கு மாதக் கூலியாய் ரூ. 6000 முதல் 9000 வரை கொடுக்கப்படும்'' என்றும், ''கோழிகளுக்கு இரண்டு வயதாகி முட்டையிடும் தருவாயில் கோழியை எடுத்துக்கொண்டு, முதலீட்டுப் பணத்தைத் திருப்பித் தருவோம்'' என்றும் இந் நிறுவனங்கள் கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்து வருகின்றன.

மறுபக்கம், விவசாயிகளோ இரண்டு லட்ச ரூபாயை விவசாயத்திலோ அல்லது வங்கியிலோ போடுவதற்குப் பதிலாக இத்திட்டத்தில் முதலீடு செய்தால் கூடுதலாக வருவாய் கிடைக்கும் என்ற எண்ணத்துடன், இத்தகைய ஈமு கோழிப் பண்ணை நிறுவனங்களின் வாயிலில் வரிசையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மாற்றுத் தொழிலாகவும், விவசாயிகள் காலங்காலமாக செய்து

ஈமு கோழி வளர்ப்புத் தொழில்: மோசடியை மூலதனமாகக் கொண்டு விவசாயிகளை ஏய்க்கும் இன்னுமொரு ''போன்சி திட்டம்''.





படிப்பகம்

www.padippakam.com





ஈமு கோழிப்பண்ணை நிறுவனங்களின் விளம்பர வித்தை:
ஈமு கோழி வளர்ப்புத் தொழில் கொழுத்த இலாபத்துடன் விரிவடைந்து
முன்னேறுவதாகக் காட்டி விவசாயிகளை ஏய்க்கும் மோசடி.

வரும் கால்நடை வளர்ப்பை ஒத்ததாக இருப்பதாலும் இத்தொழிலை விவசாயிகள் பெருத்த நம்பிக்கையுடன் பார்க்கின்றனர். தமிழகத்தில் ஈரோடு, திருச்சி, பல்லடம், புதுக்கோட்டை, வாலாஜாபாத், கொடைக்கானல் முதலான பகுதிகளில் இத்தகைய ஈமு வளர்ப்புப் பண்ணைகள் அதிகரித்து வருகின்றன. தமிழகம் மட்டுமின்றி, புதுச்சேரி, ஆந்திரா, கோவா, மகாராஷ்டிரா, ஒரிசா, ம.பி. முதலான மாநிலங்களிலும் ஈமு கோழிப் பண்ணைகள் விரிவடைந்து வருகின்றன.

உண்மை நிலவரம் என்னவென்றால், ஈமுவின் தாயகமான ஆஸ்திரேலியாவில் 1987-ஆம் ஆண்டில்தான் வணிகரீதியான ஈமு பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்குள்ள ஈமு பண்ணைகள் ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான கோழிகள் இருந்தன. இப்படிப் பல ஆண்டுகளாக இத்தொழிலில் இருக்கும் அந்நாட்டில் ஈமு கோழியின் இறைச்சிக்கான நவீன தொழிற்சாலைகளோ, பதப்படுத்தும் நிறுவனங்களோ இல்லை. ஆஸ்திரேலியாவின் உள்ளூர்ச் சந்தையிலே மதிப்பிழந்த பொருளாக ஈமு மாறிவிட்டதால், 1996-இல் ஆஸ்திரேலியப் பண்ணைகளில் 2 லட்சமாக இருந்த ஈமு கோழிகளின் எண்ணிக்கை 2005-இல் 18,600 - ஆகக் குறைந்துவிட்டது. ஆனால், இங்குள்ள நிறுவனங்களோ உள்ளூர் சந்தை விரிவடைகிறது; ஏற்றுமதி செய்கிறோம் எனக் கூசாமல் புளுகி, விவசாயிகளை ஏய்த்து வருகின்றன.

ஐந்தாண்டுகளுக்கு முன் 3 மாத வயது கொண்ட ஒரு ஜோடி குஞ்சை 15,000 முதல் 20,000 ரூபாய் வரை இந்நிறுவனங்கள் விவசாயிகளிடம் விற்றன. குஞ்சுகள் வளர்ச்சி அடைந்து முட்டை இடும்பொழுது முட்டையை ரூ.1500 முதல் 2000 வரை கொள்முதல் செய்ய உத்திரவாதம் கொடுத்தன. ஆனால் இப்போது ரூ. 1000-க்குக்கூட முட்டையை வாங்க மறுக்கின்றன. மேலும், கொள்முதல் என்பதே அரிதாகத்தான் நடக்கிறது. இந்நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த முட்டையிலிருந்து குஞ்சு உற்பத்தி செய்து மீண்டும் புதிதாக வரும் விவசாயிகளிடம் விற்கின்றன. முட்டை கொள்முதல் - குஞ்சு உற்பத்தி - விநியோகம் - முட்டை கொள்முதல் என்ற சுழற்சிதான் தொடர்ந்து நடந்தேறி வருகிறது. ஈமு கறி ஏற்றுமதி என்பது நடப்பதில்லை. ஈமு கோழித் தீவன நிறுவனங்களோ, கறியை வெட்டிப் பதப்படுத்தும் நிறுவனங்களோ, தோலை உரித்துப் பதப்படுத்தும் நிறுவனங்களோ, கறியிலிருந்து எண்ணெய் எடுக்கும் நிறுவனங்களோ இந்தியாவில் இல்லை. கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் ஈமு கோழியின் உடற்கூற்றியல், மருத்துவம், நோய்கள் பற்றிய எந்தப் பாடமும் இல்லை.

''நன்கு வளர்ச்சியடைந்த ஈமு கோழி 5-6 அடி உயரமும் 50 முதல் 60 கிலோ வரை எடையும் கொண்டதாக இருக்கும். அதில் குறைந்தபட்சம் 35 கிலோ கறி தேறும். சுவைமிக்க ஈமு கறி விலை ஒரு கிலோ ஏறத்தாழ ரூ. 450 ஆகும். ஈமு கோழிகள் கொழுப்பு - கொலஸ்ட்ரால் இல்லாதது; ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், ஆஸ்த்துமா உள்ளவர்கள் தாராளமாக இதன் இறைச்சியை உண்ணலாம். இக்கோழியின் தோல் சாயமிடுவதற்குப் பயன்படுகின்றன. இதன் இறகுகள் பிரஷ் தயாரிக்கப் பயன்படுகின்றன. முட்டை ஓடுகள் அலங்கார வேலைகளுக்குப் பயன்படுகிறது. ஈமு கோழியின் எண்ணெய் மருத்துவத்துக்குப் பயன்படுகிறது. கோழிக்கறி, ஆட்டுக்கறிக்கு இணையாக ஈமு கோழிக்கறி இனி இந்தியாவில்






படிப்பகம்

www.padippakam.com

செல்வாக்கு பெறும்'' என்று ஈமு பண்ணை நிறுவனங்களும் ஊடகங்களும் ஆரூடம் கூறுகின்றன. ஆனால், ஈமுவின் இறைச்சியை மிகவும் சொற்பமானவர்களே சாப்பிடுகிறார்கள். அப்படிச்சாப்பிடுபவர்கள் கூடச் சோதனை அடிப்படையில்தான் சாப்பிடுகிறார்களே தவிர, ஈமு கோழி இறைச்சியை ருசிப்பதற்காக அல்ல.

அப்படியென்றால் ஈமு கோழிப்பண்ணை நிறுவனங்கள் எப்படித் தொழில் நடத்த முடிகிறது என்ற கேள்வி எழலாம். இத்திட்டத்தில் ஆரம்பத்தில் சேரும் விவசாயிகளுக்கு , அடுத்தடுத்து வந்துசேரும் விவசாயிகளின் முதலீட்டு பணத்திலிருந்து எடுத்துக் கொடுக்கப்படுகிறது. ''எனக்கு முறையாகப் பணம் கிடைத்துவிட்டது'' என்று ஆரம்பத்தில் இத்திட்டத்தில் சேரும் விவசாயி தெரிவிப்பதால், மற்றவர்களும் நம்பிக்கை பெற்று பணத்தைக் கட்டுகிறார்கள். இது சங்கிலி போல் தொடர்கிறது. முன்னால் வந்தவனுக்கு பின்னால் வந்தவனின் முதலீட்டுப் பணத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் அனைவரும் இக்கோழியை வளர்த்து முட்டைகளை விற்கின்றனர். முட்டை வியாபாரம் மட்டும்தான் நடக்கிறதே தவிர, கறி வியாபாரம் எதுவும்நடப்பதில்லை.

ஈமு வளர்ப்புக்கு நிலமும் நேரமுமில்லாதவர்களுக்கு, நிறுவனங்களே முதலீடு செய்பவரின் சார்பாக ஒரு இடத்தில் பண்ணையை அமைத்து கோழிகளைப் பராமரிக்கும் திட்டத்தை வைத்துள்ளன. இத்திட்டத்திலும் கணிசமானவர்கள் இணைந்துள்ளார்கள். முதலீடு செய்தவர்கள் அவ்வப்பொழுது தங்கள் பண்ணையைப் பார்வையிட்டு வரலாம். இப்படி முதலீடு செய்தவர்கள் பார்வையிடச் செல்லும் பொழுது, ஒரே பண்ணையை திருப்பித் திருப்பி முதலீட்டாளர்களுக்கு காட்டி, ''இதுதான் உங்கள் பண்ணை'' என்று முதலீட்டாளர்களை இந்நிறுவனங்கள் ஏமாற்றுகின்றன. இப்படி ஈமு வளர்ப்பைக் கொண்டு, விவசாயிகளை ஏய்த்தும் பல மோசடித் திட்டங்களின் மூலமாகவும் இந்நிறுவனங்கள் பல கோடிகளைச் சுருட்டியுள்ளன.

இன்றைய சந்தை நிலவரப்படி வளர்ச்சியடைந்த ஈமுவின் இறக்கை முதல் நகங்கள் வரை அனைத்தையும் விற்றாலும் கூட, அதனின் மொத்த மதிப்பு ரூ.25,000/- ஐக்கூடத் தாண்டாது. ஆகையால் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நிற்கும் பொழுது முட்டை கொள்முதலும் நிறுத்தப்பட்டு, கம்பெனியும் காணாமல் போய்விடும். முதலீட்டு பணமும் திரும்பி வராது. இந்த மோசடியில் ஈமு வெறும் கண்கட்டு வித்தையாக மட்டும் பயன்படுகிறது.

இப்படிப்பட்ட மோசடிகள் தினந்தோறும் நடந்து வருகின்றன. ஏற்கெனவே அனுபவ் தேக்கு மர வளர்ப்புத் திட்டம், சந்தன மரம் வளர்த்தல், கண்வலி கிழங்கு விவசாயம், முயல் வளர்ப்பு, மருந்து-நறுமணச் செடிகள் வளர்ப்பு முதலான மோசடித் திட்டங்கள் மூலம் தமிழகத்தில் விவசாயிகள் ஏய்க்கப்பட்ட கதை யாவரும் அறிந்தது. இதேபோல கோல்ட் குயிஸ்ட், டேட்டா என்டரி, இரிடியம் சுரங்கம் தோண்டுதல் , திருப்பூர் பாசி நிறுவன மோசடி, ஸ்பீக் ஆசியா ஆன் லைன், மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் லாட்டரி பரிசு, மல்டி லெவல் மார்க்கெட்டிங் முதலானவை நகர்புறத்தின் படித்த மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கத்தினரை ஏய்ப்பதற்கான மோசடி திட்டங்களாகும். இப்படிப் புதுப் புது உத்திகளில் ஆண்டுதோறும் மோசடிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இவ்வகையான திட்டங்களுக்கு முன்னோடி, அமெரிக்காவைச் சேர்ந்த போன்சி என்ற மோசடிப்பேர்வழித்தழானழ். இவன் 1930-களில் அமெரிக்கா பெரும் பொருளாதார மந்தத்தில் சிக்கி இருந்த போது, அங்கு ஈமு வளர்ப்பை ஒத்த பல மோசடிகளை மேற்கொண்டு பல -று கோடி டாலர்களைச் சுருட்டிய பின்னர் பிடிபட்டான். ஆகையால், இவ்வகை மோசடிகள் ''போன்சி திட்டம்'' என்றழைக்கப்படுக்கின்றன.

உலகமயமாக்கலின் விளைவாக மக்களின் வேலை வாய்ப்புகள், வாழ்வாதாரங்கள் பிடுங்கப்படுகின்றன. அதேநேரத்தில் மக்களை நுகர்வு வெறியில் இழுத்து, உழைப்பின் மேலிருந்த மதிப்பீடுகள் ஒழிக்கப்பட்டு, சம்பாதிப்பதற்கான நெறிமுறைகள் உடைக்கப் படுவதும் நடந்து வருகிறது. இந்தச் சூழல் ஈமு வளர்ப்பு போன்ற போன்சி திட்டங்களுக்கு உரமாக அமைகிறது. ஆகையால், விவசாயிகளும் உழைக்கும் மக்களும் உலகமயமாக்கலுக்கு எதிராக நின்று, இழந்து வரும் வேலைவாய்ப்புகளையும் வாழ்வாதாரங்களையும் மீட்க, மோசடியை மூதலனமாகக் கொண்டுள்ள ஈமு கோழி வளர்ப்பு போன்ற திட்டங்களை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும்.

● சுடர்

## பிழைதிருத்தம்

கடந்த அக்டோபர் 2011 இதழில் வெளியான ''பரமக்குடி துப்பாக்கிச் சூடு: பார்ப்பன ஜெயா அரசின் வன்கொடுமை வெறியாட்டம்!'' என்ற கட்டுரையில், ''கடந்த 2010-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதியன்று நடந்த தேவர் குரு பூசையின் போது முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரான நயினார் நாகேந்திரன், அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், தேவர் ஜெயந்தி நாள் அரசாங்க நிகழ்ச்சியாக நடத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார். 2010-ஆம் ஆண்டு அக்டோபரில் மைய அரசு முத்துராமலிங்கத் தேவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு, அவரைச் சுதந்திரப் போராட்ட வீரராகவும் அரசியல் தலைவராகவும் சித்தரித்தது'' (பக்.5) என்று தவறாக எழுதப்பட்டுள்ளது.

இதை, ''கடந்த ஆண்டு நடந்த இமானுவேல் சேகரனின் குருபூசையின் போது முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரான நயினார் நாகேந்திரன், அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இமானுவேல் சேகரனின் நினைவுநாள் அரசாங்க நிகழ்ச்சியாக நடத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார். 2010-ஆம் ஆண்டு அக்டோபரில் மைய அரசு இமானுவேல் சேகரன் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது'' என்று திருத்தி வாசிக்குமாறு கோருகிறோம்.

இத்தவறை சில வாசகத் தோழர்களும் அக்கறையுடன் சுட்டிக்காட்டியுள்ளனர். எமது கவனக்குறைவால் ஏற்பட்ட இத்தவறுக்கு வருந்தி சுயவிமர்சனம் ஏற்பதோடு, இது போன்ற தவறுகள் நேராமல் கவனமாகச் செயலாற்ற உறுதியேற்கிறோம்.

-ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

## ஆப்கான் – இந்தியா – பாகிஸ்தான்:

# அமெரிக்க மேலாதிக்கத்தின் அடியாளாக இந்தியா!

**இந்திய அரசு அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு வால்பிடித்துச் செல்வதால், பாகிஸ்தானைப் போன்றதொரு அபாயகரமான சூழலுக்குள் இந்தியாவும் தள்ளப்படும்.**

இந்தியாவின் வடமேற்கே பாகிஸ்தானை அடுத்துள்ள நாடான ஆப்கானிஸ்தானின் அதிபர் கர்சாயும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் கடந்த அக்டோபர் 5-ஆம் தேதியன்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இந்தியாவின் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளியாக ஆப்கான் திகழும் என்று அந்த ஒப்பந்தத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2014-இல் ஆப்கானிலிருந்து நேட்டோ படைகள் முற்றாக விலகிய பிறகு, ஆப்கானின் பாதுகாப்புக்கு உற்ற துணையாக இந்தியா நிற்கும் என்றும், ஆப்கான் படைகளுக்கு இந்திய இராணுவம் முறைப்படி 2014-லிருந்து பயிற்சி அளிக்கும் என்றும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆப்கான் படைகளுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு ஈடாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர இடத்தைப் பெற அந்நாடு வாக்களிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

இது தவிர, ஆப்கானின் ஹஜிகாக் பகுதியில் உள்ள வளமான இரும்புத் தாதுவைத் தோண்டியெடுக்கும் சுரங்கங்கள் அமைக்கவும், வடக்கு ஆப்கானில் உள்ள எண்ணெய் - எரிவாயு வளத்தை அகழ்ந்தெடுக்கவும் இந்தியா உதவும் என்றும், விமானப் போக்குவரத்து மட்டுமின்றி, கடன் மற்றும் காப்பீடு துறைகளிலும் இந்தியாவும் ஆப்கானும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயல்படும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பிந்தைய ஆப்கானில் மறு நிர்மாணப் பணிகளைச் செய்தல், வர்த்தக மையங்களை இணைக்கும் சாலைகள் அமைத்தல், சிறிய அளவிலான மின் திட்டங்கள் மற்றும் மருத்துவமனைகள் அமைத்தல் முதலான அடிக்கட்டுமானத் துறைகளிலும் இந்தியா பங்கேற்கும் என்றும், கடல்வழியைப் பயன்படுத்த பாகிஸ்தானை மட்டுமே சார்ந்திருந்த நிலை மாறி, இனி இந்திய உதவியுடன் கடல் வழியை ஆப்கான் பயன்படுத்தும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்தியாவுடனான நட்புறவுக்குப் பெரிதும் முயற்சித்தவரும், ஆப்கான் அமைதி நடவடிக்கைக்கான உயர் தலைவருமான முன்னாள் ஆப்கான் அதிபர் பர்ஹானுதீன் ரப்பானி கொல்லப்பட்ட பிறகு போடப்படும் இந்த ஒப்பந்தம், இரு நாடுகளின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பும் பெரும் முன்னேற்றத்தை அளிக்கும்'' என்று இந்திய ஆட்சியாளர்கள் ஏற்றிப் போற்றுகின்றனர். ''2 பில்லியன் டாலர் அளவுக்கு ஆப்கானுக்கு உதவி செய்து, இந்தியா மிக முக்கிய கொடையாளராக உள்ளது என்று ஆப்கான் மக்கள் பாராட்டுகின்றனர். மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கும் வர்த்தகத்துக்கும் அடிக்கடி ஆப்கானியர்கள் இந்தியாவுக்கு வரத் தொடங்கியுள்ளனர். சினிமா நடிகர்-நடிகைகள், கிரிக்கெட் விளையாட்டு வீரர்களின் படங்களைத் தங்கள் கடைகள், வீடுகளில் ஒட்டி வைக்கும் அளவுக்கு இந்திய சினிமாக்கள், தொலைக்காட்சித் தொடர்களுக்கு ஆப்கான் மக்களிடம் பெருத்த வரவேற்பு உள்ளது. இந்துஸ்தான் எங்களது நண்பன், பாகிஸ்தான் எங்களது எதிரி என்று ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படையினர் உளமாறக் கூறுகின்றனர்'' என்று ஊடகங்கள் இந்தப் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தை ஆப்கானியர் வரவேற்பதாக வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றன.

''அமெரிக்காவின் நீண்டகால நெருங்கிய கூட்டாளியாகச் செயல்பட்ட பாகிஸ்தான், இந்த ஒப்பந்தத்தால் தனிமைப்பட்டுள்ளது. ஆப்கான் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதோடு, உஸ்

ஆப்கான் அதிபர் கர்சாயிடம் ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொள்ளும் மன்மோகன் சிங்: போர்த்தந்திர முக்கியத்துவமிக்க கூட்டாளியாக ஆப்கானை அறிவித்து அமெரிக்க அடியாளாக இந்தியா விரிவடைவதற்கான புதிய ஏற்பாடு.





படிப்பகம்

www.padippakam.com

பெகிஸ்தானின் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பைத் தாக்கி அழிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஆப்கானின் அண்டை நாடான தாஜிகிஸ்தானிலுள்ள போர்விமானத் தளத்தையும் இந்தியா பயன்படுத்தும். ஆப்கான் மட்டுமின்றி, அதன் அண்டை நாடுகளிலும் தீவிரவாதத்தை வேரறுக்க இந்தியா பாடுபடும். இவற்றின் மூலம் இந்தியா தெற்காசியாவில் மட்டுமின்றி, மேற்காசியாவிலும் செல்வாக்கு செலுத்த வாய்ப்பு கிடைத்துள்ளது'' என்று இராணுவ ஆலோசகர்கள் இந்த ஒப்பந்தம் குறித்துக் கருத்து தெரிவிக்கின்றனர்.



செப்டம்பர் 2008-இல் 41பேரைப் பலிகொண்டு 140 பேரைப் படுகாயப்படுத்திய இந்தியத் தூதரகத்தின் மீதான தாலிபான் தற்கொலைப்படைத் தாக்குதலின் கோரம்: இந்தியாவின் அமெரிக்கக் கைக்கூலித்தனத்துக்குத் தரப்படும் விலை.

பெருமிதத்துடன் சித்தரிக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் ஆப்கானில் மூலதனமிட்டு வளரவும் விரிவடையவும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், தெற்காசியாவில் அமெரிக்காவின் நம்பகமான அடியாளாக உள்ள இந்தியா, இப்போது மேற்கு, மத்திய ஆசியப் பகுதிகளிலும் தலையிட்டு அமெரிக்காவுக்கு அடிமைச்சேவகம் செய்ய இன்னுமொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வல்லரசுக் கனவில் மிதக்கும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு இந்த ஒப்பந்தம் சாதகமானதாகத் தோன்றினாலும், அதன் மறுபக்கமோ பேரபாயமானது.

கடந்த அக்டோபர் 7-ஆம் நாள் ஆப்கான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் பத்தாம் ஆண்டு தொடக்கத்தைக் குறிக்கும் நாளாகும். தீவிரவாதத்தை முறியடிப்பதும், தாலிபான்களையும் அல்கய்தா தலைமையையும் அழித்தொழிப்பதும்தான் நோக்கம் என்று ஆப்கானை ஆக்கிரமித்த அமெரிக்கா, கடந்த மே மாதத்தில் பின்லாடனையும் சுட்டுக் கொன்ற பின்னரும் தனது ஆக்கிரமிப்பை நீக்கிக்கொண்டு விடவில்லை. ஆப்கானில் அது வெற்றி பெறவும் முடியவில்லை.

ஆப்கான் பிரச்சினையைத் தீர்த்து, அமைதியை நிலைநாட்டுவதல்ல அமெரிக்காவின் நோக்கம். ஆப்கானிலும் மத்திய ஆசியப் பகுதியிலும் காலூன்ற ஒரு காரணம் தேவை. அமெரிக்காவின் தலையீடு தேவை என்பதை நியாயப்படுத்துவதற்கு ஒரு தீராத பிரச்சினை இப்பகுதியில் நீடிக்க வேண்டும். அப்போதுதான் மத்திய ஆசியப் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்த முடியும். அதற்காகவே பயங்கரவாதத்தை அமெரிக்கா காரணமாகக் காட்டுகிறது. உள்நாட்டு நெருக்கடிகளின் காரணமாக ஆப்கான் சிக்கலிலிருந்து மீள அமெரிக்கா விரும்பினாலும், அதனால் ஆப்கானிலிருந்து காலை எடுக்க முடியவில்லை. எனவே, பாக். மூலமாக தாலிபான்களில் ஒரு பிரிவினருடன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு முயற்சிக்கிறது.

மறுபுறம், அமெரிக்காவின் விசுவாச நாடான பாகிஸ்தான், ஆப்கானில் மேற்கொள்ளப்படும் எந்த அமைதி நடவடிக்கையிலும் தன்னை முன்னிறுத்த விழைகிறது. பாகிஸ்தானின் மேற்குப் பகுதியிலுள்ள தீவிரவாத ஹக்கானி இயக்கத்தினருக்கும் ஆப்கானின் தாலிபான் இயக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதால், சமரசப் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தான் தலையிட்டு செல்வாக்கு செலுத்தவே விரும்புகிறது.

பாக். ஆளும் வர்க்கம் அமெரிக்காவை ஆதரிக்கிறது என்றாலும், பாகிஸ்தானில் அதிகரித்துவரும் அமெரிக்கத் தலையீட்டின் காரணமாகவும், பாகிஸ்தானின் மேற்குப் பகுதியில் அமெரிக்கா நடத்திவரும் ஆளில்லாத விமானத் தாக்குதலாலும் பாக். மக்களிடம் அமெரிக்க எதிர்ப்பு மனப்போக்கு நிலவுவதால், அதையும் கணக்கில் கொண்டு மக்களின் பொதுக்கருத்துக்கு மதிப்பளிப்பதாகக் காட்டிக் கொள்ள அமெரிக்காவுக்குப் பெயரளவிலான எதிர்ப்பைக் காட்டுகிறது.

பாகிஸ்தானின் மேற்குப் பகுதி தாலிபான்களின் புகலிடமாக இருப்பதால், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த அங்கு பெருமளவு படைகளை பாகிஸ்தான் குவிக்க வேண்டியிருக்கிறது. கிழக்குப் பகுதியில் உள்ள இந்தியாவுடன் முறுகல் நிலை இருந்தால், இந்திய எல்லையில் மேலும் படைகளைக் குவிக்க வேண்டியிருக்கும் என்பதால், தற்காலிகமாக இந்தியாவுடன் முறுகலற்ற நிலையை மேற்கொள்ள பாக். விரும்புகிறது.

இதனடிப்படையில், 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய-பாக். வர்த்தக அமைச்சர்கள் இருதரப்பு உறவுகள் மேம்பட பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். விசா, கடவுச்சீட்டு முதலான விவகாரங்களில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் பாக். முன்வந்துள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தேர்தலில் நிரந்தரமற்ற உறுப்பினராக பாக். போட்டியிடுவதை இந்தியா எதிர்க்கவில்லை. பாக். ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் ஆப்கானில் அடுத்தடுத்து தாக்குதல் நடத்திவரும் சூழலில், அமெரிக்கா தனது நிதியுதவிகளை நிறுத்தப் போவதாக மிரட்டி வருவதால் பாக். இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல முனைகளில் போர் தொடுத்து பின்னடைவைச் சந்திப்பதை விட, தற்போதைக்கு இந்தியாவுடன் இணக்கமாக



படிப்பகம்

நடந்து கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைமை பாக்.கிற்கு உள்ளது. மறுபுறம், பாகிஸ்தானின் புதிய அணுகுமுறையைக் கணக்கில் கொண்டு செயல்படுமாறு அமெரிக்கா இந்தியாவை வலியுறுத்துகிறது.



அமெரிக்க பயங்கரவாதம்: அமெரிக்க குண்டுவீச்சுத் தாக்குதலை எதிர்த்து பாகிஸ்தானில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன்.

இவற்றை வைத்து பாகிஸ்தான் அமெரிக்காவால் ஓரங்கட்டப்பட்டு, ஆப்கான் விவகாரத்தில் இந்தியா முக்கியத்துவம் பெற்று வருவதாக ஊடகங்கள் சிலாகிக்கின்றன. தெற்காசியா மட்டுமின்றி, மத்திய ஆசியாவில் செல்வாக்கு செலுத்துமளவுக்கு இந்தியா வல்லரசாக வளர்ந்து வருவதாகவும், ஆப்கான் ஆட்சியாளர்கள் பாகிஸ்தானை நம்பாமல் இந்தியாவைப் பெரிதும் நம்புவதைப் போலவும் அவை ஊதிப் பெருக்குகின்றன. ஆனால் ஆப்கான் அதிபரோ, பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் இரட்டைச்சகோதரர்கள் என்று டெல்லியில் ஒப்பந்தம் கையெழுத்தானபோது தெரிவித்துள்ளார். அதாவது, பாகிஸ்தானைப் புறக்கணித்துவிட்டு ஆப்கானில் அமைதியையோ வளர்ச்சியையோ சாதிக்க முடியாது என்று அவர் வெளிப்படையாகவே தெரிவிக்கிறார்.

ஆப்கானில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் அந்நியத் துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதில் அமெரிக்கத் துருப்புகள் மட்டும் ஒரு லட்சம் பேராவர். சி.என்.என். தொலைக்காட்சியின் கூற்றுப்படி, கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினர் 2,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் அமெரிக்கர்கள் மட்டும் 1,780 பேராவர். பத்தாம் ஆண்டு ஆக்கிரமிப்புப் போரின் தொடக்கத்தையொட்டி, கடந்த செப்டம்பரிலிருந்தே தாலிபான்களின் தாக்குதல்கள் அடுத்தடுத்து நடந்தன. ரப்பானி கொல்லப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாக பாக். ஆதரவு பெற்ற ஹக்கானி குழுவினர் காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினர். காபூல் நகரை ஏறத்தாழ 20 மணி நேரத்திற்கு தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அச்சுறுத்துமளவுக்கு தாலிபான்கள் இன்னமும் வலுவாகவே உள்ளனர். அமெரிக்கா மற்றும் அதன் தலைமையிலான நேட்டோ கூட்டணிப்படைகளாலேயே ஆப்கானில்வெற்றி கொள்ள முடியாத சூழலில், இப்போது இந்தியா அங்கு நுழைவது புலி வாலைப் பிடித்த கதையாகவே முடியும்.

இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் விரிவடைவதற்கும் இந்திய ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் அடியாளாகச் சேவை செய்யவும் இன்னுமொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பாகிஸ்தானின் வாலை முறுக்கி வம்புக்கு இழுப்பது இந்திய ஆளும் வர்க்கத்தின் விரிவாக்கத்துக்கும் மேலாதிக்கத்துக்கும் அவசியமாகிவிட்டது. மறுபுறம், தற்காலிகமாக இந்தியாவுடன் இணக்கம் காட்டும் பாகிஸ்தான், நாளை போர் தொடுக்கத் துணிந்தால் அது அணு ஆயுதப் போராக மாறும் அபாயம் உள்ளது.

மேலும், ஏற்கெனவே அமெரிக்க பொம்மையாட்சிக்கு ஆதரவாக உள்ள இந்தியாவை எதிர்க்கும் தாலிபான்கள் ஆப்கானிலுள்ள இந்தியத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதோடு, இந்தியக் கட்டுமானப் பணியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். தற்போதைய ஒப்பந்தத்தின் மூலம் ஆப்கான் ஆட்சியாளர்களுடனான இந்தியாவின் கூட்டு வலுப்பட்டுள்ள நிலையில் தாலிபான்களின் தாக்குதல் ஆப்கானில் மட்டுமின்றி, இந்தியாவிலும் தொடர்வதற்கான பேரபாயமும், இஸ்லாமியத் தீவிரவாதிகள் மற்றும் அமெரிக்க எதிர்ப்பாளர்களின் தாக்குதல் இலக்காக இந்தியா மாறும் பேரபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் காட்டி மீண்டும் பயங்கரவாதப் பீதியூட்டிக் கருப்புச் சட்டங்கள் நாட்டு மக்கள் மீது ஏவப்படும். பயங்கரவாதிகளின் கூட்டாளிகள் என்று புரட்சிகர - ஜனநாயக இயக்கங்கள் ஒடுக்கப்படும். இந்துவெறி பயங்கரவாத சக்திகள் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பயங்கரவாத வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விடும். இவற்றின் விளைவாக அமெரிக்கக் கைக்கூலித்தனம் மேலும் அதிகரிக்கும். பாகிஸ்தானைப் போல இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதலும் அதற்கெதிராக அரசு பயங்கரவாதத் தாக்குதலும் தீராத தலைவலியாக மாறிப் போகும். எவ்வாறு பாகிஸ்தான் மதவெறிச் சக்திகளாலும், தீவிரவாதத்தாலும், இராணுவ ஒடுக்குமுறையாலும், அமெரிக்காவின் தாக்குதலாலும் கந்தலாகிக் கிடக்கிறதோ, அதைப் போன்றதொரு நிலைக்கு இந்தியா இழுத்துச் செல்லப்படும் பேரபாயம் சூழ்ந்துள்ளதையே நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி







நம்பிக்கையை ஏற்படுத்தி, அந்த அவநம்பிக்கையின் நிழலில் அது உயிர் வாழ்கிறது. கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம், தனிநபர் ஊக்கம் மற்றும் உரிமை மறுப்பு, அதிகாரவர்க்க ஆட்சி என்ற பொய்களை மக்கள் மனதில் நிலைநாட்டி பீதியூட்டியிருக்கிறது. ரசிய, சீன சோசலிசங்களின் சீரழிவு இந்தப் பொய்களுக்கு புனுகு தடவிவிட்டது. அவற்றின் தோல்வியோ ஊனமுற்ற முதலாளித்துவத்துக்கு ஊன்றுகோலாகப் பயன்படுகிறது.



முதலாளித்துவத்தின் பேராசை, கொள்ளை, பித்தலாட்டம், போர்வெறி ஆகியவற்றை அமெரிக்காவின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். எனினும், திட்டவட்டமான மாற்று ஒன்றை முன்வைத்துப் போராடாதவரை, இவையெல்லாம் ஆற்றாமை தோற்றுவிக்கும் புலம்பல்களாகவே முடிகின்றன. சியாட்டிலில் தொடங்கி கடந்த பத்து ஆண்டுகளாக அடுத்தடுத்து பல முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்குலகில் நடந்த போதும், அவை முன்னேற முடியாமல் தேங்குவதற்கு இதுதான் காரணம். இந்தத் தேக்கம் தொடருமாயின், அது சோர்வையும் அவநம்பிக்கையையுமே மக்களிடம் பரப்பும். அவ்வகையில் அராஜகவாதிகள், பின்நவீனத்துவவாதிகள், டிராட்ஸ்கியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்ட பலரும் முதலாளித்துவத்தின் கையாட்களாக இருந்து மக்களைச்சிதறடிக்கிறார்கள். விரக்திக்குத் தள்ளுகிறார்கள். முதலாளித்துவத்திடம் சரணடையச் செய்கிறார்கள்.




வால் ஸ்டிரீட் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு வரும் பல்லாயிரக்கணக்கான மக்களை ஈர்ப்பதற்குக் காரணம் முதலாளித்துவத்தின் மீதான மக்களின் வெறுப்பு. அதனை சோசலிசத்தின் மீதான விருப்பமாக மாற்றுவதன் மூலம்தான் முதலாளித்துவத்தை வீழ்த்த முடியும். ஏகாதிபத்தியமாகவும், மேல்நிலை வல்லரசுகளாகவும், ஒற்றைத்துருவ மேலாதிக்கமாகவும், உலக வர்த்தகக் கழகமாகவும் அரசியல்-பொருளாதார-இராணுவ ரீதியில் மென்மேலும் மையப்படுத்தப்பட்ட ஒரு கொடிய வன்முறை எந்திரமாக மாறிவரும் உலக முதலாளித்துவத்தை உதிரியான கட்சிகளும், கலவையான முழக்கங்களும், தொளதொளப்பான அமைப்பும் வீழ்த்த முடியாது.

முதலாளித்துவத்துக்கு எதிரான மார்க்சிய - லெனினிய சித்தாந்தம், ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் அமைந்த கட்சி, அதன் தலைமையில் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட மக்கள்திரள் - இவையில்லாமல் எந்தவொரு நாட்டிலும் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத்தை வீழ்த்த இயலாது. மக்களின் கோபம் ஒரு சுனாமியைப் போன்ற ஆற்றலுடன் மேலெழுந்தாலும், ஆளும் வர்க்கம் அந்த சுனாமிக்கும் ஒரு வடிகாலைத் தயாரித்துவிடும். வீரம் செறிந்த எகிப்து மக்களின் போராட்டம் எப்படி மடைமாற்றப்பட்டதென்பது நம் கண் முன் தெரியும் சமகாலச் சான்று.

முதலாளித்துவத்துக்கு எதிரான கம்யூனிசத்தின் சித்தாந்தப் போர், போல்ஷ்விக் உறுதியும் கட்டுப்பாடும் கொண்ட கட்சி - இவ்விரண்டு அவசரத் தேவைகளையும் நிறைவு செய்யக் கோருகின்றன உலகெங்கும் எழுந்துவரும் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள்.

தொரட்டி



படிப்பகம்

www.padippakam.com




''வரலாறு சொல்லித்தர வாரி யாரு வருவாரு'' - இது, இந்து மத வெறிக் கும்பல் அதிகாரத்தில் இருந்தால் கல்வித்துறையில் என்ன நடக்கும் என்பதை நையாண்டி செய்யும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பாடல் வரி. இந்த நையாண்டி வெறும் கற்பனையல்ல, உண்மை என்பதை அண்மையில் டெல்லியிலுள்ள மத்தியப் பல்கலைக்கழகமான டெல்லிப் பல்கலைக்கழகத்தில் நடந்துவரும் சம்பவங்கள் நிரூபித்து வருகின்றன.

அப்பல்கலைக்கழகத்திலுள்ள வரலாற்றுத் துறை இளங்கலை பட்டப்படிப்பில், '' முன்னூறு வித மான இராமாயணக் கதைகள் இந்தியா, தெற்காசியா, கிழக்காசியாவைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பன்னெடுங்காலமாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றன'' என்பதனை வரலாற்று ஆதாரங்களோடு நிரூபிக்கும் ஏ.கே. இராமானுஜன் என்ற வரலாற்றாசிரியர் எழுதிய ''முன்னூறு இராமாயணங்கள்:ஐந்து உதாரணங்களும் மொழிபெர்ப்புப் பற்றிய மூன்று கருதுகோள்களும்'' என்ற கட்டுரை பாடமாக வைக்கப்பட்டிருந்தது. ''இக்கட்டுரை மதத் துவேஷத்தோடு எழுதப்பட்டிருக்கிறது'' என்ற பச்சை பொய்யைத் திரும்பத்திரும்பக் கூறி, இக்கட்டுரையைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டுமென இந்து மதவெறி பாசிசக் கும்பலைச் சேர்ந்த மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்தி பரிஷத்தும், அப்பாசிசக் கும்பலுக்கு ஆதரவான ஆசிரியர் சங்கங்களும் டெல்லிப் பல்கலைக்கழகத்தை மிரட்டி வந்தன.

அகில பாரதிய வித்யார்தி பரிஷத்தைச் சேர்ந்த கும்பல் 2008-ஆம் ஆண்டு இக்கட்டுரையை எதிர்ப்பது என்ற பெயரில் டெல்லிப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை கட்டிடத்திற்குள் நுழைந்து ரவுடித்தனத்தில் இறங்கியதோடு, அப்பொழுது வரலாற்றுத் துறை தலைவராக இருந்த பேராசிரியர் எஸ்.இசட்.ஹெச். ஜாப்ஃரியைத் தாக்கவும் முனைந்தது. இக்கட்டுரையைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றம் தனது விசாரணையின் கீழ் கொண்டு வந்து, ''நான்கு வரலாற்று அறிஞர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு, அக்குழு இக்கட்டுரை பற்றி கருத்துத் தெரிவிக்க வேண்டும்; அதன் அடிப்படையில் டெல்லிப் பல்கலைக்கழகம் அக்கட்டுரையைப் பாடத் திட்டத்திலிருந்து நீக்குவது பற்றி முடிவெடுக்க வேண்டும்'' என உத்தரவிட்டிருந்தது.

நான்கு பேர் கொண்ட அக்குழுவின் மூன்று உறுப்பினர்கள், ''அக்கட்டுரை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடும், மதிநுட்பத்தோடும் எழுதப்பட்டிருப்பதால் அதனை நீக்கத் தேவையில்லை'' எனக் கருத்துத் தெரிவித்தனர். ஆனாலும், டெல்லிப் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு இப்பெரும்பான்மை கருத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அக்கட்டுரையைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கி ஆர்.எஸ்.எஸ். கும்பலின் விருப்பத்தை நிறைவேற்றியிருக்கிறது. டெல்லிப் பல்கலைக்கழகத்தின் இக்காவித்தனமான முடிவை எதிர்த்து, அப்பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை ஆசிரியர்களும், மாணவர்களும் போராடத் தொடங்கியுள்ளனர். அப்போராட்டத்திற்குப் பல்வேறு இடதுசாரி இயக்கங்கள் மட்டுமின்றி, ஜனநாயக உணர்வுமிக்க வரலாற்று அறிஞர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அகில பாரதிய வித்யார்தி பரிஷத் கும்பலைச் சேர்ந்த ஒருவன், ''நான் டி.வி.யில் ராமாயணம் பார்த்திருக்கிறேன். அதைத் தவிர வேறு எந்த ராமாயணத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்ற 'ஆழ்ந்த' கருத்தை இப்பிரச்சினை தொடர்பாக முன்வைத்திருக்கிறான். இதனை ஒரு முட்டாளின் கருத்தாக ஒதுக்கித் தள்ளமுடியாது. ஆர்.எஸ்.எஸ். கும்பலின் கொள்கையே புராணக் கட்டுக்கதைகளை இந்தியாவின் வரலாறாகத் திணிப்பதுதான்.

இப்புராணக் கதைகளையும், அதன் கதை மாந்தர்களையும் யாரும் விமர்சனரீதியாகப் பார்க்கக்கூடாது என ஆர்.எஸ்.எஸ். கட்டளை போடுவதும், 'மதச்சார்பற்ற' காங்கிரசு கூட்டணி அரசின் கட்டுப்பாட்டிலுள்ள டெல்லிப் பல்கலைக்கழகம் அப்''ஃபத்வா''விற்குப் பணிந்து போவதும் சகிக்கமுடியாத வெட்கக்கேடு. சமச்சீர் கல்வி தரமற்றது எனக் கூப்பாடு போட்டுவரும் கும்பலைச் சேர்ந்த ஒரு 'அறிவாளி'கூட, இந்த வெட்கக்கேட்டை எதிர்த்து இதுவரை வாய்திறக்கவில்லை என்பதும் தற்செயலானதல்ல.

ஏ.கே.இராமானுஜத்தின் கட்டுரையை மீண்டும் பாடத்திட்டத்தில் சேர்க்கக் கோரி டெல்லிப் பல்கலைக்கழக மாணவர்களும் வரலாற்றுத்துறை ஆசிரியர்களும் நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்